**கவனிக்க**.- *06.12.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1841 - 2013 දෙසැම්බර් මස 13 වැනි සිකුරාදා - 2013.12.13

*1841 ஆம் இலக்கம் – 2013 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | *1674* | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *1680* |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2014, சனவரி மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, திசெம்பர் மாதம் 20 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).*

*1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.*

*2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.*

*அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.*

*2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.*

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

*3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-*

*3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.*

*3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.*

*3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.*

*3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.*

*3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.*

*3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.*

*3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.*

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

*4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.*

*4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.*

*4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.*

*4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.*

**5. யுத்த சேவைச் சலுகை :**

*5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.*

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

*6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.*

*6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.*

*6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.*

*6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.*

*6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

*7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.*

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

*இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.*

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - காலி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமான தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2014, தை மாதம் 13 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2013, கார்த்திகை 19.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| காலி | நாகொடை | மாலமுற பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் கங்கபடபத்து பிரிவில் விவாகப் (பொது) பதிவாளர் பதவி | அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர், மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், காலி |

12-381

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - குருநாகல் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமான தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2014, தை மாதம் 13 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2013, கார்த்திகை 19.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| குருநாகல் | அலவ்வ | தம்பதெனி உடுகஹ தெற்கு பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் தம்பதெனி ஹத்பத்துவ பிரிவில் விவாகப் (பொது/கண்டிய) பதிவாளர் பதவி | அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர், மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், குருநாகல் |

12-382

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - காலி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2014, தை மாதம் 13 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2013, கார்த்திகை 25.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| காலி | நியாகம | நரனேவிற்ற பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் பென்தர-வலல்லாவிற்ற கோரளை பிரிவில் விவாகப் (பொது) பதிவாளர் பதவி | அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர், மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், காலி |

12-467

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - மாத்தளை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமான தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2014, தை மாதம் 13 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2013, கார்த்திகை 27.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| மாத்தளை | இரத்தோட்டை | பல்லேசிய பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் மாத்தளை கிழக்குப் பிரிவில் விவாகப் (பொது/கண்டிய) பதிவாளர் பதவி | அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர், மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், மாத்தளை |

12-564

---

## அரசாங்க சேவை ஆணைக்குழு

அரச வளங்கள் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு

### சட்ட உத்தியோகத்தர் (நிறைவேற்றுச் சேவை வகுப்பின் III ஆம் தரம்) பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்த்தல்

அரச வளங்கள் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சில் சட்ட உத்தியோகத்தர் பதவிக்கு பின்வரும் தகைமைகளைக் கொண்ட இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **ஆட்சேர்ப்பு முறை**.- அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரர்களில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சை சபையொன்றினால் நடாத்தப்படுகின்ற கட்டமைப்பு ரீதியிலான நேர்முகப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் அதிகூடிய புள்ளிகளைப் பெறுகின்ற விண்ணப்பதாரர்கள் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கமைய ஆட்சேர்க்கப்படுவார்கள். அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள (6 ஆம் இலக்கத்தின்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள) புள்ளிகள் வழங்கும் நடைமுறைக்கிணங்க கட்டமைப்பு ரீதியிலான நேர்முகப் பரீட்சை நடத்தப்படும்.

2. **தேவையான தகைமைகள்**.- (i) கல்வி/ தொழில்சார் தகைமைகள்.- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சட்டம் தொடர்பில் பட்டம் பெற்றிருத்தல் அல்லது உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியொருவராக சத்தியப்பிரமாணம் செய்திருத்தல்.

(ii) அனுபவம்.- உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியொருவராக சத்தியப்பிரமாணம் செய்ததன் பின்னர் மூன்று (3) ஆண்டுகளுக்குக் குறையாத முனைப்பான தொழில் அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

(iii) உடல் தகைமைகள்.- ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எந்தவொரு பகுதியிலும் சேவையாற்றுவதற்கும் பதவியின் கடமைகளை ஆற்றுவதற்கும் போதியளவிலான உடல், உள தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(iv) ஏனையவை :

* தமிழ் மொழி மற்றும் ஆங்கில மொழித் தேர்ச்சி மேலதிக தகைமையொன்றாகக் கருதப்படும்.
* இலங்கையின் பிரசையொருவராயிருத்தல் வேண்டும்.
* விண்ணப்பதாரர் சிறந்த நடத்தையைக் கொண்டவராயிருத்தல் வேண்டும்.
* விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியில் இப்பதவிக்கு ஆட்சேர்ப்பதற்குத் தேவையான தகைமைகளை அனைத்து விதத்திலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

3. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நியதிகளும் சேவை நிபந்தனைகளும் :**

(i) இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியத்துடன் கூடியதுமாகும். விதவைகள்/ விதுரர்கள், அநாதைகள் ஓய்வூதிய முறைக்கு பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும்.

(ii) நியமனம் 3 ஆண்டுகால தகுதிகூர் நிலைக்கு உட்பட்டதாகும். சட்ட உத்தியோகத்தர் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்க்கப்பட்டு 3 ஆண்டுகளினுள் ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(iii) 07/2007 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் மற்றும் அதற்கு இடைநேர்விளைவான சுற்றறிக்கை களின் பிரகாரம் பதவிக்கு ஆட்சேர்க்கப்பட்டு 5 ஆண்டு களினுள் பதவிக்கு ஆட்சேர்க்கப்பட்டதற்கான மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரச கரும மொழியில் தேர்ச்சியைப் பெறுதல் வேண்டுமென்பதோடு, அரச கரும மொழியல்லாத மொழி மூலத்தில் பதவிக்கு ஆட்சேர்க்கப்பட்ட உத்தியோ கத்தர்கள் தகுதிகூர் காலத்தினுள் உரிய அரச கரும மொழித் தேர்ச்சியைப் பெறுதல் வேண்டும்.

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயல் நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவைக்கும், அரச நிதிப் பிரமாணங்களுக்கும், திணைக்களத்தின் ஏனைய கட்டளைகளுக்கும் இந்நியமனம் உட்பட்டதாய் அமையும்.

4. **வயதெல்லை**.- விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் 21 வயதுக்குக் குறையாத வராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

5. **சம்பள அளவுத்திட்டம்**.- இப்பதவி ரூபா 22,935 - 10 x 645 - 8 x 790 - 17 x 1,050 - ரூபா 53,555 மாதச் சம்பளத்தை உடையதாகும். (2006.04.25 ஆந் திகதிய அ. நி. சு. இல. 6/2006 மற்றும் இல. எஸ்எல்-1-2006 சம்பளத் தொகுதி)

*6*. **கட்டமைப்பு ரீதியிலான நேர்முகப் பரீட்சை பின்வரும் புள்ளிகள் வழங்கும் நடைமுறையை அடிப்படையாகக் கொண்டிருக்கும் :**

| | விடயம் | அதிகபட்ச புள்ளிகள் |
|---|---|---|
| 1 | மேலதிக கல்வித் தகைமைகள் | 20 |
| 2 | மேலதிக தொழில்சார் தகைமைகள் | 15 |
| 3 | மேலதிக அனுபவம் | 30 |
| 4 | கணினி அறிவு | 15 |
| 5 | ஆங்கில மொழித் தேர்ச்சி | 15 |
| 6 | நேர்முகப் பரீட்சையில் வெளிக்காட்டுகின்ற திறமை | 05 |
| | மொத்தம் | 100 |

*7*. **விண்ணப்பதாரர்களின் ஆளடையாளம்**.- கட்டமைப்பு ரீதியிலான நேர்முகப் பரீட்சைக்கு அனைத்து விதத்திலும் நிறைவான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்கள் மட்டுமே அழைக்கப்படுவார்கள்.

நேர்முகப் பரீட்சையின்போது அனைத்து சான்றிதழ்களினதும் மூலப்பிரதிகள் மற்றும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையின்போது தமது ஆளடையாளத்தை உறுதி செய்வதற்கு பின்வரும் ஆளடையாள ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப் படும் :-

(i) ஆட்பதிவு ஆணையாளரால் வழங்கப்பட்ட ஆளடையாள அட்டை ;
(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

*8*. **விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல்**.- (i) விண்ணப்பங்கள் 2014.01.03 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர், “செயலாளர், அரச வளங்கள் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு, இல. 561/3, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 05’’ எனும் முகவரிக்குக் கிடைக்கத்தக்கதாக பதிவுத்தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். இத்திகதிக்குப் பின்னர் கிடைக்கின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(ii) சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பப்படிவத்தின் மாதிரிப்படிவமொன்று இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் அவர்களது விண்ணப்பங்களை ஏ4 அளவிலான தாளில், முதலாவது பக்கம் இல. 1 முதல் 18 வரையிலும், இரண்டாவது பக்கம் இல. 9 முதல் 11 வரையிலும், மூன்றாவது பக்கம் இல. 12 முதல் 17 வரையிலும் அமையக்கூடிய வகையில் தயாரித்து தாமாகவே நிரப்புதல் வேண்டும்.

(iii) விண்ணப்பங்கள் அனுப்பப்படும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் “ சட்ட உத்தியோகத்தர் (நிரந்தர) பதவிக்கு விண்ணப்பித்தல்” எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

(iv) விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பமானது அரச பாடசாலையொன்றின் அதிபர்/சமாதான நீதவான்/சத்தியப்பிரமாண ஆணையாளர்/சட்டத்தரணி/பிரசித்த நொத்தாரிசு/முப்படையின் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் அல்லது மாதம் ரூபா 22,935 ஒருங்கிணைந்த சம்பளத்தைப் பெறுகின்ற நிரந்தர பதவியொன்றை வகிக்கின்ற அரசாங்க உத்தியோகத்தர் ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(v) தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை தாம் சேவையாற்றுகின்ற திணைக்களத்தின் திணைக்களத் தலைவர் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

(vi) இத்துடனுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு ஒவ்வாதனவான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் காணாமற் போதல் அல்லது தாமதமாதல் தொடர்பிலான எவ்வித முறைப்பாடும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

*9*. **போலியான தகவல்களை வழங்கல்**.- உங்களால் அனுப்பப் படுகின்ற விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் ஒரு தகவல் போலியானதென்பது அல்லது தவறானதென்பது ஆட்சேர்ப்புக்கு முன்னர் அறியவருமிடத்து உங்களது விண்ணப்பதாரர் நிலை இரத்துச் செய்யப்படும். அத்தகைய போலியான அல்லது தவறான தகவல்கள் எதுவும் ஆட்சேர்ப்பின் பின்னர் அறியவருமிடத்து அதற்கு ஏற்புடைய தான நடவடிக்கைகளின்கீழ் சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

*10*. வெற்றிடங்களை நிரப்புகின்ற அல்லது நிரப்பாதிருக்கின்ற உரிமை அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்குரியதாகும்.

அரசாங்க சேவை ஆணைக்குழு கட்டளையின் பிரகாரம்,

செயலாளர்,
அரச வளங்கள் மற்றும் தொழில்
முயற்சி அபிவிருத்தி அமைச்சு.

அரச வளங்கள் மற்றும் தொழில் முயற்சி
அபிவிருத்தி அமைச்சு,
இல. 561/3, எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு 05.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அரச வளங்கள் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு**

சட்ட உத்தியோகத்தர் பதவி (நிறைவேற்றுச் சேவை வகுப்பின் III ஆம் தரம்)

1. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் (தமிழில்) :----.
   (ii) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) :----.
   (iii) முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் (தமிழில்) : ----.
   (iv) முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் (ஆங்கிலத்தில்) :----.

2. முகவரி :
   (i) அலுவலகம் :----.
   (ii) பிரத்தியேகம் :----.

3. தொலைபேசி இலக்கம் :
   (i) அலுவலகம் :----.
   (ii) பிரத்தியேகம் :----.

4. (i) தற்போதைய பதவி மற்றும் தொழில் புரியும் இடம் :----.
(ii) அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :----.

5. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

(i) பால் :
ஆண்/பெண் :----.

(ii) விவாகமானவரா, விவாகமாகாதவரா, விதவையா என்ற விபரம் :----.

6. (i) பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

(ii) விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி யன்று வயது :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

7. நீங்கள் இலங்கைப் பிரசையாகவுள்ளது பரம்பரை மூலமா ? அல்லது பதிவுசெய்தலின் மூலமா ? :----.

8. கல்வி மற்றும் தொழில் தகைமைகள் :

(அ) சித்தி, தொழில் மற்றும் தொழில்நுட்ப தகைமைகளை விபர மாகக் குறிப்பிடுக.

| பரீட்சை | ஆண்டு | தோற்றிய பிரதானமான பாடங்கள் | சித்தி | நிறுவனத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| | | | | |

(அ) விண்ணப்பதாரர் உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்த ஆண்டு :----.

(ஆ) விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு சட்ட உத்தி யோகத்தராக சேவையாற்றியுள்ள காலம் :----.

9. அனுபவம் :

(i) நிறுவனம் :----.
(ii) சேவைக்காலம் :----.

10. கணினித் துறையில் அனுபவம் :----.

11. வேறு தகைமைகள் :----.

12. ஆங்கில மொழித் தேர்ச்சி :----.

13. ஏனைய ஏற்புடைய தகவல்கள் :----.

14. விண்ணப்பதாரர் இதற்கு முன்னர் ஏதேனும் குற்றச்செயல் தொடர்பில் நீதிமன்றத்தில் தோற்றியுள்ளாரா ?

அவ்வாறு தோற்றியிருப்பின் அது பற்றிய விபரங்கள் :----.

15. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயல் நடைமுறை விதிகளின் V ஆவது அத்தியாயத்தின் பிரகாரம் அரச சேவைக்கு நியமிக்கப் படுவதற்கு பொருத்தமான ஒருவரா என்பது :----.

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் உறுதிமொழிகின்றேன். இதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு விபரம் போலியானதென அல்லது தவறானதென நான் தெரிவுசெய்யப்பட முன்னர் கண்டறியப்பட்டால் நான் தெரிவுசெய்யப்படுவதற்கு தகுதியற்றவனாவேன் என்பதையும், தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் கண்டறியப்பட்டால் எதுவித நட்டஈடுகளுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நன்கறிவேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

16. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிசெய்தல் :**

அரச வளங்கள் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் சட்ட உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கின்ற .................................. என்பவரை நான் தனிப்பட்ட வகையில் அறிவேன் என்பதையும், 2013/2014 ........................ மாதம் ..................... ஆந் திகதி அவர் எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

இடம் :----.
உறுதிப்படுத்துவரின் முழுப்பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

**திணைக்கள/நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :**

அரச வளங்கள் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் சட்ட உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கின்ற இந்நிறுவனத்தில் ........................................................ பதவியை வகிக்கும் திரு./திருமதி/செல்வி .......................................................... இன் விண்ணப்பத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன். அவரின் வேலைகள் மற்றும் நடத்தை திருப்திகரமானது என்றும், அவருக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஏதுமில்லை என்றும், ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளும் அபிப்பிராயமில்லை என்றும் உறுதிசெய்கின்றேன். அவர் இப்பதவிக்குச் தெரிவுசெய்யப் படுவாராயின், அவரைச் சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது.

----,
திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பம்.
(பதவி முத்திரை)

திகதி :----.

12-338

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

திருத்தம்

**போக்குவரத்து அமைச்சின் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம்**

(இவ்விடயம் தொடர்பான அறிவித்தல் 2013.11.08 ஆந் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.)

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திற்கு இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் II ஆம் வகுப்பு "ஆ" பிரிவில் மோட்டார் வாகன பரீட்சகர்களை ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2013

இணைப்பு 01: 4 ஆம் பகுதி "இ" பிரிவில் ஏற்கனவே அரச சேவையிலுள்ள அதிகாரிகளின் உச்ச வயதெல்லை இம்முறை மட்டும் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

எஸ். எச். ஹரிஸ்சந்திர,
மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம்.

மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம்,
இல. 341, எல்விட்டிகல மாவத்தை,
நாரஹேன்பிட்டி,
கொழும்பு 05,
2013, நவெம்பர் 26.

12-413

---

**உயர் கல்வி அமைச்சு**

இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம்

**உயர் தொழில்நுட்பவியல் நிறுவகங்களுக்கு மாணவர்களை அனுமதித்தல் - கல்வி ஆண்டு 2014**

2012 ஆம் ஆண்டில் அல்லது அதற்கு முன்னர் க. பொ. த. (உ. த.) பரீட்சையை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளோரிடமிருந்து இலங்கை தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்தினால் (SLIATE) நடாத்தப்படுகின்ற உயர் தேசிய டிப்ளோமாவிற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**விண்ணப்பிக்கும் விதம்.**- கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்டு முறையாக பூர்த்தி செய்யப்பட்டுள்ள விண்ணப்பங்கள், கணக்கு இல. 025-100133397613 இல் இலங்கையின் மக்கள் வங்கி, பார்க் வீதி கிளை (கொழும்பு) அல்லது வேறேதேனும் மக்கள் வங்கியில் ரூபா 500 (ஐநூறு) ஐ பற்று வைத்து பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டுடன் பதிவுத்தபாலில், பிரிவு "ஆ" இல் குறிப்பிடப்பட்டுள்ள உரிய உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம்/பிரிவிற்கு நேரடியாக அனுப்பப்படுதல் வேண்டும். "விண்ணப்பிக்கும் பாடநெறியை" கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட நிறுவகங்களுக்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள், விண்ணப்பிக்கப்படும் ஒவ்வொரு விண்ணப்பமும் ரூபா 500 பெறுமதியான தனித்தனி பற்றுச்சீட்டை இணைத்து தனித்தனி விண்ணப்பப்படிவத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மேலே குறிப்பிடப்பட்ட கணக்கு இலக்கத்தை தவிர்ந்த ஏனைய கணக்கு இலக்கங்களுக்கு பற்று வைக்கப்பட்டுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் கவனத்திற்கொள்ளப்பட மாட்டா.

பிரிவு 'ஆ' இல் நடாத்தப்படும் பாடநெறிகள் போன்றே உயர் தொழில்நுட்பவியல் நிறுவகங்கள்/உ. தொ. நி. பிரிவுகளின் முகவரிகள் தரப்பட்டுள்ளன. தங்கள் தகைமைகளுக்கேற்ப பிரிவு "அ" வில் தரப்பட்டுள்ள பட்டியலிலிருந்து தங்கள் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை தெரிவுசெய்தல் வேண்டும்.

**விரிவுரைகளின் வகை :**

| | | |
|---|---|---|
| பகல்/முழுநேர பாடநெறிகள் | : | வேலைநாட்கள் - பகல் நேரம் |
| பகுதி நேர பாடநெறிகள் | : | வார இறுதி நாட்கள் - பகல் நேரம் |
| போதனா மொழிமூலம் | : | ஆங்கிலம் |

உரிய துறையில் கடமையாற்றுவோருக்கே பகுதி நேர பாடநெறிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

**பாடநெறிக் கட்டணங்கள்**.- பகல்/முழு நேர பாடநெறிகளுக்கு பாடநெறிக் கட்டணம் அறவிடப்படமாட்டாது. பகுதிநேர பாடநெறிகளுக்கான தவணைக் கட்டணங்கள் (ஆறு மாதம்) பின்வருமாறு :

கணக்கியல் உயர் தேசிய டிப்ளோமா (HNDA) ரூபா 4,000.
ஆங்கிலம் உயர் தேசிய டிப்ளோமா (HND in English) ரூபா 6,000.
தகவல் தொழில்நுட்பவியல் உயர் தேசிய டிப்ளோமா (HNDIT) ரூபா 12,000.

**நேர்முகப் பரீட்சை**.- குறுகிய பட்டியற்படுத்தப்பட்ட விண்ணப்பதாரிகள் தேர்விற்காக எழுத்துமூலப் பரீட்சை ஒன்றுக்கு தோற்ற வேண்டும் அல்லது ஒரு நேர்முகப் பரீட்சைக்கு தோற்ற வேண்டும். மாணவர்களின் தேர்வுகள், க. பொ. த. (உ./த.) பரீட்சை மொத்தப் புள்ளிகள் மற்றும் Z - புள்ளிகளின் அடிப்படையிலேயே நடைபெறும். எழுத்துமூலம் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றும் இடம், நேரம் மற்றும் திகதி மற்றும் நேர்முகப் பரீட்சைக்கு சமர்ப்பிக்கத் தேவையான ஆவணங்கள் பற்றி கடிதம் மூலம் தனிப்பட்ட முறையில் நிறுவனத் தலைவரால் அறிவிக்கப்படும். நேர்முகப் பரீட்சையில் மூல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அவ்வாறு இல்லாத சந்தர்ப்பத்தில் கல்வி நிகழ்ச்சித்திட்ட பதிவு நேரத்தில் மூல ஆவணங்களை சமர்ப்பிக்கும் ஒப்பந்தத்தின்மீது சான்றுப்படுத்தப்பட்ட நிழற்பட பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**தங்குமிட வசதிகள்**.- வரையறை செய்யப்பட்ட தங்குமிட வசதிகள், பெண்களுக்காக உ. தொ. நிறுவகம் I, நைவல/தெஹிவளை மற்றும் அதேபோன்று ஆண்களுக்காக உ. தொ. நிறுவகம், ஹார்டி அம்பாறை/மட்டக்குளி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வசதி முழுநேர பாடநெறி மாணவர்களுக்கு மட்டும் ஆகும்.

**ஒவ்வொரு பாடநெறிக்கும் விண்ணப்பிக்கத் தேவையான தகைமைகள் :**

**பிரிவு 'அ'**

| | | |
|---|---|---|
| 1. | பொறியியல் உயர் தேசிய டிப்ளோமா (எச்என்டிஈ) - சிவில் (முழு நேரம்) | - 3 1/2 வருடங்கள் |
| | பொறியியல் உயர் தேசிய டிப்ளோமா (எச்என்டிஈ) - மின்சாரம் (முழுநேரம்) | - 3 1/2 வருடங்கள் |
| | பொறியியல் உயர் தேசிய டிப்ளோமா (எச்என்டிஈ) - இயந்திரவியல் (முழுநேரம்) | - 3 1/2 வருடங்கள் |
| | கட்டிட சேவைகள் பொறியியல் உயர் தேசிய டிப்ளோமா (எச்என்டிபீஎஸ்ஈ) - (முழுநேரம்) | - 3 1/2 வருடங்கள் |
| | பரிமாண நிலஅளவை உயர் தேசிய டிப்ளோமா (எச்என்டிகியூஎஸ்) - (முழுநேரம்) | - 2 1/2 வருடங்கள் |

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :

(i) க.பொ.த. (உ.த.) பரீட்சையில் (2012/2011/2010) கணிதப் பிரிவில் ஒரே அமர்வில் மூன்று பாடங்களில் சித்திகள் பெற்றிருத்தல்.

அத்துடன்

(ii) க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கில மொழியில் சாதாரண சித்தி பெற்றிருத்தல்.

**2. கணக்கியல் உயர் தேசிய டிப்ளோமா - "எச்என்டிஏ" (முழுநேரம்) - 4 வருடங்கள்**

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) க.பொ.த. (உ.த.) பரீட்சை (பழைய பாடத்திட்டம்) இல் ஒரே தடவையில் வணிக புள்ளிவிபரவியல், இணைந்த கணிதம், கணக்கியல் அடங்கலாக மூன்று பாடங்களில் சித்தியெய்திருத்தல் வேண்டும். இவற்றில் ஏதேனும் இரு பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். இவற்றில் ஏதேனும் ஒன்றிற்கு திறமைச் சிததி பெறவில்லையாயின் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் கணிதத்தில் திறமை சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

(ii) தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தினால் நடாத்தப்படும் கணக்கீட்டு தொழில்நுட்பவலர் தேசிய சான்றிதழை பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலத்தில் சாதாரண சித்தி பெற்றிருத்தல்.

**2.1 கணக்கியல் உயர் தேசிய டிப்ளோமா - "எச்என்டிஏ" (பகுதிநேரம்) - 4 வருடங்கள்**

விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும் :-

(i) க.பொ.த. (உ.த.) பழைய பாடத்திட்டத்தில் நான்கு பாடங்கள்/க. பொ. த. (உ. த.) புதிய பாடத்திட்டத்தில் மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் சிதியெய்து இருத்தல்.

அல்லது

(ii) தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தினால் நடத்தப்படும் கணக்கீட்டு தொழில்நுட்பவலர் தேசிய சான்றிதழை பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

அல்லது

(iii) தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தினால் நடாத்தப்படும் வியாபார கல்விகள் (கணக்கியல் குழு) தேசிய சான்றிதழை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தினால் நடாத்தப்படும் கணக்கீட்டு தேசிய சான்றிதழை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் ;

அத்துடன்

செயன்முறை அனுபவம்.- விண்ணப்பதாரி அரசாங்க நிறுவனம்/ பொது தொழில்முயற்சி அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் இத்துறையில் சேவையாற்றுதல் வேண்டும்.

பின்வரும் தகைமை கொண்டுள்ளோர் 1 ஆம் ஆண்டில் விலக்களிக்கப்படுவர் அத்துடன் இடம் மற்றும் ஏனைய அனுமதி தேவைப்பாடுகளில் தகைமை இருப்பின் 2 ஆம் ஆண்டிற்கு அனுமதிக்கப்படுவார்கள் :-

(i) இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தினால் அல்லது தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட வியாபார கல்வி/வியாபார நிதி தேசிய டிப்ளோமா சான்றிதழைப் பூர்த்திசெய்திருத்தல்.

(ii) உயர் தொழில்நுட்வியல் கல்வி நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட வியாபார நிருவாகம்/வியாபார நிதி/முகாமைத்துவம் உயர் தேசிய டிப்ளோமா சான்றிதழைப் பூர்த்திசெய்திருத்தல்.

(iii) உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம்/தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட வர்த்தக உயர் தேசிய டிப்ளோமா சான்றிதழ் 2 ஆம் வருடத்தைப் பூர்த்திசெய்திருத்தல்.

(iv) கணக்கியல்/ வியாபார நிருவாகம்/ விற்பனை முகாமைத்துவம்/ மனிதவள முகாமைத்துவம்/ வியாபார நிதி/ வியாபார பொருளாதாரத்துறை ஆகியவற்றில் உரிய துறையில் பல்கலைக்கழக பட்டம் பெற்றிருத்தல்.

(v) இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் மத்திம பரீட்சையில் சித்தியெய்தி இருத்தல்.

(vi) இலங்கை பட்டய முகாமைத்துவ கணக்காளர் பரீட்சையில் பகுதி I, II ஆகியவற்றைப் பூர்த்திசெய்திருத்தல் (CIMA I, II).

(vii) கணக்கீட்டு தொழில்நுட்பவலர் நிறுவனத்தின் (AAT) III ஆம் கட்ட பரீட்சையில் சித்தியெய்தி இருத்தல்.

(viii) சான்றிதழ் பெற்ற முகாமைத்துவ கணக்காளர் நிறுவன இறுதிப் பரீட்சையில் சித்தியெய்தி இருத்தல்.

**3. முகாமைத்துவ உயர் தேசிய டிப்ளோமா - "எச்என்டிஎம்" (முழுநேரம்) - 3 வருடங்கள்**

**உல்லாச மற்றும் உபசரணை முகாமைத்துவ உயர் தேசிய டிப்ளோமா - "எச்என்டிரீஎச்எம்" (முழுநேரம்) - 3 வருடங்கள்**

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) ஏதேனும் துறையில், க.பொ.த. (உ. த.) பரீட்சையில் சகல பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்திபெற்றிருத்தல் (கணிதம், உயிரியல் விஞ்ஞானம்/வர்த்தகம் விரும்பத்தக்கது)

அல்லது

(ii) தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தினால் நடாத்தப்படும் வியாபார கல்விகள் (பொது நிருவாகம்/சந்தைப்படுத்தல்) தேசிய சான்றிதழ் அல்லது கணக்கீட்டு தொழில்நுட்பவலர் தேசிய சான்றிதழ்.

அத்துடன்

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் கணிதம் மற்றும் ஆங்கிலத்தில் சாதாரண சித்தி பெற்றிருத்தல்.

**4. வியாபார நிர்வாகம் உயர் தேசிய டிப்ளோமா - "எச்என்டிபிஎ" (முழுநேரம்) - 2 1/2 வருடங்கள்**

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) க.பொ.த. (உ. த.) பரீட்சையில் வர்த்தகத் துறையில் ஒரே அமர்வில் சகல பாடங்களிலும் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் :-

அல்லது

தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தினால் நடாத்தப்படும் கணக்கீட்டு தொழில்நுட்பவலர் தேசிய சான்றிதழை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் கணிதம் மற்றும் ஆங்கிலத்தில் சாதாரண சித்தி பெற்றிருத்தல்.

**5. தகவல் தொழில்நுட்பவியல் உயர் தேசிய டிப்ளோமா - "எச்என்டிஐரி" (முழுநேரம்) - 2 1/2 வருடங்கள் (பகுதி நேரம்) - 2 1/2 வருடங்கள்**

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) க.பொ.த. (உ. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் சகல பாடங்களிலும் ஏதேனும் துறையில் சித்திபெற்றிருத்தல். (கணிதம், உயிரியல் விஞ்ஞானம், வர்த்தகம் விரும்பத்தக்கது)

அத்துடன்

(ii) க. பொ. த. (சா.த.) பரீட்சையில் கணிதம் மற்றும் ஆங்கிலத்தில் சாதாரண சித்தி பெற்றிருத்தல்

அத்துடன்

***குறிப்பு***.- (பகுதிநேர மாணவர்களுக்கு மட்டும்) தகவல் தொழில்நுட்பத் துறையில் சேவையாற்றவேண்டும்.

**6. தொழில்நுட்பவியல் உயர் தேசிய டிப்ளோமா - "எச்என்டிரி" (விவசாயம்) (முழு நேரம்) - 3 வருடங்கள்**

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் (பழைய பாடத்திட்டம்) விஞ்ஞான துறையில் ஒரே அமர்வில் இரசாயனவியல், விவசாய விஞ்ஞானம், தாவரவியல், விலங்கியல் மற்றும் பௌதிகவியல் எனும் பாடங்களுள் ஏதேனும் இரண்டு பாடங்கள் அடங்கலாக நான்கு பாடங்களில் சித்தி எய்தியிருத்தல்.

அல்லது

(ii) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் (புதிய பாடத்திட்டம்) விஞ்ஞான துறையில் ஒரே அமர்வில் இரசாயனவியல், விவசாய விஞ்ஞானம், உயிரியல், பௌதிகவியல் பாடங்களுள் ஏதேனும் இரண்டு பாடங்களுடன் மொத்தம் மூன்று பாடங்களில் சித்தி எய்தியிருத்தல்.

அத்துடன்

(iii) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் கணிதம் மற்றும் ஆங்கிலத்தில் சாதாரண சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**7. ஆங்கிலத்தில் உயர் தேசிய டிப்ளோமா "எச்என்டி இன் இங்கிலிஷ்" (முழு நேரம்) - 2 வருடங்கள் (பகுதி நேரம்) - 2 1/2 வருடங்கள்**

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஏதேனும் துறையில் ஒரே அமர்வில் சகல பாடங்களிலும் சித்தி பெற்றிருப்பதுடன் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

(ii) கல்விக் கல்லூரியினால் வழங்கப்பட்ட டிப்ளோமா அல்லது ஆங்கில நிபுணத்துவ ஆசிரியர் பயிற்சி சான்றிதழ்

அல்லது

(iii) க. பொ. த. (உ. த.) பரீட்சை (புதிய பாடத்திட்டம்) யில் ஏதேனும் துறையில் சகல பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்தியெய்தி இருப்பதுடன் பொது ஆங்கிலம் (General English) பாடத்திலும் சித்தியெய்தி இருத்தல்

அல்லது

(iv) க. பொ. த. (உ. த.) பரீட்சை (புதிய பாடத்திட்டம்) யில் மூன்று பாடங்களில் சித்திகள் அத்துடன் தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தினால் நடாத்தப்படும் வர்த்தகம், கைத்தொழில் மற்றும் மேலதிக கல்விக்கான ஆங்கில தேசிய சான்றிதழ் அல்லது அதற்குச் சமமான தகைமைகள்

*குறிப்பு*.- பகுதிநேர விண்ணப்பதாரிகள் உரிய துறையில் மேற்கூறிய தகைமையொன்றுடன் நிரந்தர சேவையொன்றில் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.

**8. வியாபார நிதி உயர் தேசிய டிப்ளோமா - "எச்என்டிபிஎவ்" (முழு நேரம்) - 2 1/2 வருடங்கள்**

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சை (பழைய பாடத்திட்டம்) யில் ஒரே அமர்வில் பொருளாதாரம், வர்த்தகமும் நிதியும், கணக்கியல் உட்பட நான்கு பாடங்களில் சித்தி

அல்லது

(ii) க. பொ. த. (உ. த.) பரீட்சை (புதிய பாடத்திட்டம்) யில் ஒரே அமர்வில் பொருளாதாரம், வியாபார கல்வி மற்றும் கணக்கியல் உட்பட அல்லது பின்வரும் பாடங்களில் ஒன்றுடன் மேற்கூறப்பட்ட பாடங்கள் இரண்டில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் :-
(புவியியல், மனைப் பொருளியல், அரசியல் விஞ்ஞானம், தர்க்க சாஸ்திரம், விஞ்ஞானசார் முறைகள், விவசாய விஞ்ஞானம் அல்லது இணைந்த கணிதம்

அல்லது

(iii) தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தினால் நடாத்தப்படும் கணக்கீட்டு தொழில்நுட்பவலர் தேசிய சான்றிதழை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

மற்றும்

(iv) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் சாதாரண சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**9. உணவு தொழில்நுட்பவியல் உயர் தேசிய டிப்ளோமா- "எச்என்டிஎவ்ரி" (முழு நேரம்) - 2 1/2 வருடங்கள்**

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் உயிரியல் அல்லது பௌதீக விஞ்ஞான துறையில் மூன்று பாடங்களில் சித்தி அத்துடன்

(ii) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் கணிதம் மற்றும் ஆங்கிலத்தில் சாதாரண சித்தி பெற்றிருத்தல்.

**பிரிவு 'ஆ'**

உயர் தொழில்நுட்பவியல் நிறுவகங்கள்/உ. தொ. நி. பிரிவுகளின் முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள் மற்றும் குறியீட்டு இலக்கங்கள்.

| குறியீட்டு இல. | உ. தொ. நி./உ. தொ. நி. பிரிவு | முகவரிகள் | தொலைபேசி இல. | நடாத்தப்படுகின்ற பாடநெறிகளின் பெயர்கள் |
|---|---|---|---|---|
| 01 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம், அம்பாறை | இங்கினியாகலை வீதி, அம்பாறை | 063-2222056, 063-2223035 | எச்என்டிஏ (எவ்ரி), எச்என்டிஏ(பீரி), எச்என்டிஎம், எச்என் டிஐரி(எவ்ரி), எச்என்டிரி (விவசாயம்) எச்என்டி ஆங்கிலம் (எவ்ரி),எச்என்டி ஆங்கிலம் (பீரி) |
| 02 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகப் பிரிவு, அநுராதபுரம் | இல. 388/35, ஹரிஸ்சந்திர மாவத்தை, அநுராதபுரம் | 025-2234417 | எச்என்டிஏ(எவ்ரி), எச்என்டிஏ(பீரி), எச்என்டி ஆங்கிலம்(பீரி) |
| 03 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம், பதுளை | கிறீன்லண்ட் டிரைவ், பதுளை | 055-2230218, 055-2223818 | எச்என்டிஏ (எவ்ரி), எச்என்டிஏ (பீரி), எச்என்டிஎம், எச்என்டிபிஏ, எச்என்டிஐரி (எவ்ரி), எச்என்டி ஐரி(பீரி), எச்என்டி ஆங்கிலம் (எவ்ரி), எச்என்டி ஆங்கிலம் (பீரி), எச்என்டிரீஎச்எம் |
| 04 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகப் பிரிவு, மட்டக்களப்பு | "பல்நோக்கு கட்டிடம்", கோவில்குளம் கிழக்கு, ஆரயம்பதி | 065-2247519 | எச்என்டிஏ(எவ்ரி) எச்என்டிஏ (பீரி), எச்என்டி (பீரி) ஆங்கிலம் |
| 05 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம், தெஹிவளை | வைத்தியா றோட், தெஹிவளை | 011-2714270, 011-2738349 | எச்என்டிஏ(எவ்ரி), எச்என்டிஏ(பீரீ), எச்என்டிஎம், எச்என்டிபிஏ எச்என்டிஐரி (எவ்ரி), எச்என்டி ஆங்கிலம் (எவ்ரி), எச்என்டி ஆங்கிலம்(பீரீ), எச்என்டிபிஎவ், எச்என்டிரிஎச்எம் |

| குறியீட்டு அவஇ | உ. தொ. நி./உ. தொ. நி. பிரிவு | முகவரிகள் | தொலைபேசி இல. | நடாத்தப்படுகின்ற பாடநெறிகளின் பெயர்கள் |
|---|---|---|---|---|
| 06 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம், யாழ்ப்பாணம் | இல. 665/5, கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம் | 021-2222595<br>021-2239803 | எச்என்டிஈ, எச்என் டிஏ(எவ்ரி), எச்என் டிஏ (பீரி), எச்என் டிஎம், எச்என்டிபிஏ, எச்என்டிஐரி (எவ்ரி), எச்என்டிஐரி (பீரி), எச்என்டி ஆங்கிலம் (எவ்ரீ), எச்என்டி ஆங்கிலம் (பீரி), எச்என் டிரிஎச்எம் |
| 07 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம், கண்டி | இல. 16, கெப்பெட்டிபொல வீதி, கண்டி | 081-2226644,<br>081-2232097 | எச்என்டிஏ(எவ்ரி), எச்என்டிஏ (பீரி), எச்என்டிஎம், எச்என் டிபிஏ, எச்என்டிஐரி (எவ்ரி), எச்என்டி ஆங்கிலம் (பீரி) எச்என்டி, ஆங்கிலம் (பிரி) எச்என்டிரிஎச்எம் |
| 08 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம், கேகாலை | பண்டாரநாயக்க மாவத்தை, கேகாலை | 035-2221297<br>035-2221713 | எச்என்டிஏ(எவ்ரி), எச்என்டிஏ (பீரி), எச்என்டிஎம், எச்என்டிஐரி(எவ்ரி), எச்என்டி ஆங்கிலம் (எவ்ரி), எச்என்டி ஆங்கிலம்(பீரி) |
| 09 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம், குருநாகல் | இல. 22/1, வில்கொட வீதி, குருநாகல் | 037-2224911,<br>037-2229583 | எச்என்டிஏ (எவ்ரி), எச்என்டிஏ (பிரி), எச்என்டிஎம், எச்என்டிஐரி (எவ்ரி), எச்என்டி ஆங்கிலம் (எவ்ரி), எச்என்டி ஆங்கிலம் (பீரி) |
| 10 | காலி உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம், லபுதுவ | ஸ்ரீ தம்ம மாவத்தை, லபுதுவ, அக்மீமன | 091-2227880,<br>091-2246179 | எச்என்டிஈ, எச்என் டிஏ (எவ்ரி), எச்என் டிஏ(பீரி), எச்என் டிஎம், எச்என்டி ரிஎச்எம், எச்என் டிபிஏ, எச்என்டி ஐரி(எவ்ரி), எச்என்டிஐரி (பீரி), எச்என்டிரி (விவசாயம்) எச்என்டி ஆங்கிலம் (எவ்ரி), எச்என்டி ஆங்கிலம் (பீரி), எச்என்டிகியூஎஸ், எச்என்டிபிஎஸ்ஈ |
| 11 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம், மட்டக்குளி | இல. 42, ரொட்ரிகோ பிளேஸ், கொழும்பு 15 | 011-2529479<br>011-2521152 | எச்என்டிஈ, என்டிகியூஎஸ், எச்என்டிபிஎஸ்ஈ |

| குறியீட்டு இல. | உ. தொ. நி./உ. தொ. நி. பிரிவு | முகவரிகள் | தொலைபேசி இல. | நடாத்தப்படுகின்ற பாடநெறிகளின் பெயர்கள் |
|---|---|---|---|---|
| 12 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம், நைவல | நைவல, எஸ்ஸெல்ல, வெயாங்கொடை | 033-2287519, 033-2292544 | எச்என்டிஏ (எவ்ரி), எச்என்டிஏ(பிரி), எச்என்டிஐரி(எவ்ரி) எச்என்டிரி (விவசாயம்), எச்என்டிஐரி(எவ்ரி), எச்என்ரி ஆங்கிலம் (எவ்ரி) |
| 13 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம், இரத்தினபுரி | புதிய நகர், இரத்தினபுரி | 045-2230780 | எச்என்டிஏ(பீரி), எச்என்டிஏ(எவ்ரி), எச்என்டிஐரி (எவ்ரி), எச்என்டி ஆங்கிலம் (எவ்ரி) |
| 14 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம், சம்மாந்துறை | பிரதான வீதி, சம்மாந்துறை | 067-2261304 | எச்என்டிஏ (எவ்ரி), எச்என்டிஏ(பீரி), எச்என்ரி ஆங்கிலம் (பீரி) |
| 15 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம், தங்காலை | யாய வத்தை, மெத்தொல பிட்டிய, தங்காலை | 091-2246179 | எச்என்டிஏ (பீரி), எச்என்ரிஏ (எவ்ரி), எச்என்ரிஐரி (எவ்ரி), எச்என்ரி ஆங்கிலம் (எவ்ரி) |
| 16 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம், திருகோணமலை | கண்ணியா வீதி, வரோதய நகர், திருகோணமலை | 026-3262937 | எச்என்டிஏ (எவ்ரி), எச்என்டிஏ(பீரி), எச்என்டிஐரி(எவ்ரி), எச்என்டி ஆங்கிலம் (எவ்ரி), எச்என்டி ஆங்கிலம் (பீரி) |
| 17 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம், வவுனியா | "ஜனவத்து பியச", இல. 320, ரீ. பீ. ஜயா மாவத்தை, கொழும்பு 10 | 011-2691307 | எச்என்டிஏ (எவ்ரி) எச்என்டி ஆங்கிலம் (எவ்ரி) |

**குறிப்பு** :

1. தெரிவுசெய்யப்பட்ட பொறியியல் உயர் தேசிய டிப்ளோமா, கட்டிட சேவைகள் பொறியியல் உயர் தேசிய டிப்ளோமா, பரிமாண நிலஅளவை உயர் தேசிய டிப்ளோமா விண்ணப்பதாரிகள் வாரநாட்களில் வகுப்புகளில் கலந்துகொள்ளுதல் வேண்டும். தேவை எழுமானால் வார இறுதி நாட்களில் சில குறிப்பிட்ட நாட்களில் கலந்துகொள்ளல் வேண்டும்.

2. கணக்கியல் உயர் தேசிய டிப்ளோமா (பகல்/முழுநேரம்) பாடநெறியின் முதலாம், இரண்டாம் ஆண்டு வகுப்புகள் வாரநாட்களில் மாத்திரமே நடைபெறும். மூன்றாம், நான்காம் ஆண்டுகள் வார இறுதி நாட்களில் நடைபெறும்.

3. முகாமைத்துவ உயர் தேசிய டிப்ளோமா (பகல்/முழுநேரம்) பாடநெறியின் முதலாம், இரண்டாம் ஆண்டுகள் வார நாட்களில் பகல் காலப்பகுதியில் நடாத்தப்படும். மூன்றாம் ஆண்டு வார இறுதிநாட்களில் நடைபெறும்.

4. க.பொ. த. (உ. த.) பரீட்சையில் (புதிய பாடத்திட்டம்) சித்திபெற்ற விண்ணப்பதாரர்கள் பொது வினாப்பத்திரத்தில் சாதாரண சித்தி கட்டாயம் பெற்றிருத்தல் வேண்டும்.

5. ஒவ்வொரு கல்வி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் ஒவ்வொரு தேர்விற்கான தேர்வுப் பிரமாணமாக க.பொ. த. (உ. த.) பரீட்சையின் மொத்தப் புள்ளிகள், Z புள்ளிகள் கருத்திற்கொள்ளப்படும்.

6. கல்வி நிகழ்ச்சித் திட்டத்திற்குரிய துறையில் அல்லது பாடங்களில் சித்தியடைந்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

7. 23 வயதிற்குட்பட்டோருக்கு பகல் நேர பாடநெறிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

8. ஒரு பாடநெறியை குறித்தவொரு தொழில்நுட்ப நிறுவகத்தாலோ அல்லது பிரிவாலோ நடத்துவதற்கு குறைந்தபட்சம் 25 விண்ணப்பதாரிகள் இருத்தல் வேண்டும்.

9. விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை எதிர்பார்க்கப்பட்ட மாணவர் எண்ணிக்கையைவிட கூடுதலாக இருப்பின் நிறுவக வாரியாக விவேகப் பரீட்சை ஒன்று நடாத்தப்படும்.

10. குறிப்பிட்ட உயர் தொழில்நுட்ப நிறுவகம் அல்லது உயர் தொழில்நுட்ப நிறுவகப் பிரிவில் பாடநெறிக்கு தெரிவுசெய்யப்பட்ட பின்னர், அம்மாணவர்கள் எவ்வித காரணம் கொண்டும் வேறேதேனும் உயர் தொழில்நுட்பவியல் நிறுவகத்திற்கு மாற்றப்படமாட்டார்கள்.

11. உயர் தொழில்நுட்பவியல் நிறுவகத்தில் மூன்றாண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பாடநெறிக்கு பதிவுசெய்த விண்ணப்பதாரிகள் பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பிக்கும் பொருட்டு நிறுவகத்தால் குறிப்பிடப்பட்ட பதிவுசெய்வதற்கான இறுதி தினத்திலிருந்து 60 நாட்களுள் தமது பதிவை இரத்துச்செய்துகொள்ள வாய்ப்பளிக்கப்படும்.

**தயவுசெய்து கவனிக்கவும்**.- இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவக பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானமே, 2014 ஆம் கல்வி ஆண்டிற்கான உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம்/நிறுவகப் பிரிவு மாணவர்கள் அனுமதிக்கான இறுதித் தீர்மானமாக இருக்கும்.

விண்ணப்ப முடிவுத் திகதி : 31.12.2013.

டபிள்யூ. ஹிலரி ஈ. சில்வா,
பணிப்பாளர் நாயகம்.

இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம்,
இல. 302, "ஜனவத்து பியச",
ரீ. பீ. ஜயா மாவத்தை,
கொழும்பு 10.
இணையத்தளம் : www.sliate.ac.lk

*Office use only* | *Course Number …………*

***SPECIMEN APPLICATION FORM***

**SRI LANKA INSTITUTE OF ADVANCED TECHNOLOGICAL EDUCATION**

**Application form for admission to Higher National Diploma Courses in - 2014**

| | Name of the Course | Order of preference |
|---|---|---|
| 1 | ……………………...…… | …………..........……….... |
| 2 | ………………………..…… | ………………….....……….. |
| 3 | ……………………....… | ……..……..…………...… |
| 4 | ……………………....… | ……..……..…………...… |
| 5 | ……………………....… | ……..……..…………...… |

1. Name with Initials :——————.
2. Name/Names denoted by Initials :——————.
3. Address :——————.
4. Date of Birth : Year :——————, Month :——————, Date :——————.
   Age (as at 31.12.2013) : Years :——————, Months :——————, Days :——————.

5. National Identity Card No. :——————.

6. Sex : :——————.

7. Administrative District :——————. Contact Phone Number :——————.

8. (i) Result of G. C. E (A/L) Examination (on or Before 2012) :

Year:——————. Index No. :——————. Medium :——————.

| *Subjects* | *Grade* |
|---|---|
| 1. ……………………. | ……………. |
| 2. ……………………. | ……………. |
| 3. ……………………. | ……………. |
| 4. ……………………. | ……………. |

If under new syllabus indicate pass or fail in the Common General Paper :——————.
Aggregate/Z-Score of the above Examination :——————.

(ii) Result of G. C. E (O/L) Examination :-
Year:——————. Index No. :——————. Medium :——————.

| *Subjects* | *Grade* | *Subjects* | *Grade* |
|---|---|---|---|
| 1. ……………………. | ……………. | 6. ……………………. | ……………. |
| 2. ……………………. | ……………. | 7. ……………………. | ……………. |
| 3. ……………………. | ……………. | 8. ……………………. | ……………. |
| 4. ……………………. | ……………. | 9. ……………………. | ……………. |
| 5. ……………………. | ……………. | 10. ……………………. | ……………. |

9. Highest Qualification in English as a subject :——————.

10. Only for Part time Courses :

Details of Present Employment :——————. Date of Appointment :——————.

Post :——————.

E.P.F. Number :——————.

Place of work and Address :——————.

I do hereby declare that I am not following any other full time course of study in any other state institution. I am aware that my registration will be cancelled at any time during the period of study if it is found that I concurrently follow a full time course at any other state institution. I hereby certify that the information furnished here is true and accurate to the best of my knowledge.

——————,
Signature of Applicant.

Date :——————.

(The bank receipt for Rs.500 payable to SLIATE should be annexed.)

12-530

## அரச சேவை ஆணைக்குழு

### இலங்கை தேசிய புலமைச்சொத்து அலுவலகத்தின் உதவிப் பணிப்பாளர் (சட்டம்) III ஆம் வகுப்பிற்கு உத்தியோகத்தர்களை சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2013

இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் உதவி பணிப்பாளர் (சட்டம்) III ஆம் வகுப்பின் வெற்றிடங்களுக்காக பொருத்தமானவர்களை தெரிவுசெய்வதற்கான அரச சேவை ஆணைக்குழுவின் ஆணைப்படி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலின் முடிவில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை கீழே குறிக்கப்பட்ட தினத்திற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் இலங்கை தேசிய புலமைச்சொத்து அலுவலகத்தின் உதவிப் பணிப்பாளர் (சட்டம்) III ஆம் வகுப்பிற்கு உத்தியோகத்தர்களை சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை என்றவாறு தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும். மேலும் பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிக்கப்படல் வேண்டும்.

(அ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2014.01.13 ஆகும்.

**குறிப்பு.**- விண்ணப்பங்கள் அல்லது அது தொடர்பான கடிதங்கள் தபாலில் தொலைந்து போதல் அல்லது தாமதம் ஆதல் தொடர்பாக எந்த முறைப்பாடும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. முடிவுத் திகதிவரை விண்ணப்பப்படிவத்தை தாமதப்படுத்துவதால் ஏற்படும் நட்டங்கள் விண்ணப்பதாரியினாலேயே ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

1. **சேவையில் இணைத்துக்கொள்ளும் முறை.**- திறந்த போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களில் அதிகபட்ச புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு தகைமைகள் பரிசோதிக்கப்பட்டு அதன் பின்பு, நிலவும் வெற்றிடங்களுக்கு அமைவாக தகைமை முன்னுரிமை அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படுவர். நியமனங்களின் எண்ணிக்கை மற்றும் நியமனத் திகதி என்பன அரச சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

2. **சேவையில் சேர்த்துக்கொள்வதற்கான நிபந்தனைகள்.**- (அ) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உரித்தானதுமாகும். விதவைகள்/அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

(ஆ) இப்பதவிக்கு நியமனம்பெறும் உத்தியோகத்தர்கள் மூன்று (3) ஆண்டுகால தகுதிகாண் காலத்திற்கு உட்படுவதுடன் உதவிப் பணிப்பாளராக பதவி ஏற்று மூன்று (3) ஆண்டுகள் முடிவடையும் முன்னர் முதலாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(இ) பொது நிர்வாக சுற்றுநிருப இலக்கம் 07/2007 (II) இற்கமைய மற்றைய அரச கரும மொழி தொடர்பாக தேர்ச்சியை 5 வருட காலத்திற்குள் பெற்றுக்கொள்ளல் வேண்டும். அரச கரும மொழியல்லாத மொழியில் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்கள் மூன்று (3) ஆண்டு காலத்திற்குள் அதாவது தகுதிகாண் காலத்திற்குள் ஏதாவது ஒரு அரச கரும மொழியில் தேர்ச்சி அடைவதோடு மற்றைய அரச கரும மொழியில் ஆறு ஆண்டு (6) காலத்திற்குள் தேர்ச்சி அடைவது அவசியம்.

(ஈ) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் அரச சேவை ஆணைக்குழுவின் ஏற்பாடுகளுக்கும், நடைமுறை விதிகளுக்கும், தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கும் நிதிப் பிரமாணத்திற்கும் திணைக்களக் கட்டளைகளுக்கும் பணிதல் வேண்டும்.

(உ) தமக்கு வழங்கப்பட்டுள்ள பதவிக்கான பொறுப்பை குறிப்பிட்ட தினத்தில் பொறுப்பேற்க முடியாமல் போனவிடத்து மற்றும்/அல்லது நியமனம் வழங்கப்பட்ட பதவியினை அல்லது நியமிக்கப்பட்ட பிரதேசத்தில் கடமைகளை பொறுப்பேற்க மறுத்தாலோ அல்லது விலகிப் போனாலோ விண்ணப்பதாரியின் நியமனத்தை இரத்துச்செய்வதற்கு இடம் உண்டு.

3. **சம்பள அளவுத்திட்டம்.**- இப்பதவிக்கு பொது நிர்வாக சுற்றுநிருப இல. 06/2006 சம்பள சுற்றுநிருபத்தின்படி எஸ்எல்-1-2006 ரூ. 22,935 – 10 x 645 – 8 x 790 – 17 x 1,050 – 53,555 என்றளவான (மாதாந்தம்) சம்பள அளவு உரித்தாகும்.

4. **கல்வித் தகைமைகள்.**- மேன்முறையீட்டு நீதிமன்ற சட்டத்தரணியாக இருத்தல்/பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தில் சட்டம் தொடர்பாக பட்டம் பெற்றிருத்தல்.

**தொழில்சார் தகைமைகள்.**- மேன்முறையீட்டு நீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்ததன் பின்பு மூன்றாண்டுக்கு குறையாத சேவை அனுபவத்தினைப் பெற்றிருத்தல் (விடயம் தொடர்பாக பெற்றுக் கொள்ளப்பட்ட மேலதிக அனுபவம் விசேட தகைமையாகக் கொள்ளப்படும்.)

5. **வயதெல்லை.**- விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று விண்ணப்பதாரரின் வயது 21 இற்குக் குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

6. **உடற்தகைமைகள்.**- (அ) சேர்த்துக்கொள்ளப்படும் உத்தியோகத்தர்கள் நாட்டின் எந்தப் பிரதேசத்திலும் கடமையாற்ற விரும்புதல் வேண்டும்.

(ஆ) பதவியின் கடமைகளை நிறைவேற்ற அவசியமான உடல் ரீதியான மற்றும் மன ரீதியான ஆரோக்கியம் அவசியமாகும். (தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் வைத்திய பரிசோதனைக்கு உட்படுதல் வேண்டும்.)

7. **ஏனைய தகைமைகள்.**- (அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) சிறந்த நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பம் கோரப்பட்ட அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதியன்று பதவிக்குத் தேவையான தகைமைகள் அனைத்தும் பூர்த்திசெய்யப்பட்டிருக்க வேண்டும்.

8. **எழுத்துப் பரீட்சை :**

8.1 எழுத்துப் பரீட்சை :

8.1.1 எழுத்துப் பரீட்சை :

| வினாத் தாள் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடைவதற்கான புள்ளிகள் |
|---|---|---|---|
| ஆங்கிலம் | 2 மணித்தியாலங்கள் | 100 | 40 |
| பொது உளச்சார்பு | 1 மணித்தியாலம் | 100 | 40 |

*8.1.2 பாடத்திட்டம் :*

| பரீட்சைத் தாளின் பெயர் | பாடவிதானம் |
|---|---|
| ஆங்கிலம் | 1. *கிரகித்தல்.-* இதன்போது 200 சொற்களுக்கு குறையாத பந்தியொன்றை வாசித்து கிரகித்து விடையளிக்கும் திறன் பரிசோதிக்கப்படும்.<br>2. *இலக்கணம்.-* காலம், பெயர், வினை, நேரடி மற்றும் மறைமுக பேச்சு, செய்வினை மற்றும் செயற்பாட்டுவினை, பால் வேற்றுமை, முன்னிடைச் சொல் என்பன தொடர்பான கிரகித்தல் சோதிக்கப்படும். |
| பொது உளச்சார்பு | சொற்களாகவும் உருவ வடிவிலும் தரப்பட்டுள்ள சிக்கலான விடயங்கள் தொடர்பில் பரீட்சார்த்தி எடுக்கும் தீர்மானங்கள் மற்றும் பதில்கள் ஊடாக பரீட்சார்த்தியின் கிரகித்தல் சக்தி மற்றும் அறிவுக்கூர்மை என்பன பரிசோதிக்க எதிர்பார்க்கப்படுகிறது. |

பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் ஒவ்வொரு பாடம் தொடர்பாகவும் பெற்ற புள்ளிகள் மற்றும் முழுப்புள்ளிகள் உள்ளடங்கலாக பெறுபேறுகள் தனிப்பட்ட முறையில் வழங்கப்படும்.

*8.1.3* *நேர்முகப் பரீட்சை.-* மேலே ஒவ்வொரு வினாத்தாளுக்கும் 40% புள்ளிகளுக்கு மேல் பெறும் விண்ணப்பதாரிகளில் அதிக புள்ளிகள் பெற்ற விண்ணப்பதாரிகள் அழைக்கப்பட்டு (வெற்றிடங்களுக்குச் சமமான அளவு) அரச சேவை ஆணைக் குழுவினால் நியமிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு குழாம் ஊடாக, அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் மற்றும் உடற்றகுதிகள் என்பன பரீட்சிக்கப்படும். நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.

9. **பரீட்சை நிபந்தனைகள்**.- (அ) பரீட்சைகள் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பதாரி தமது விண்ணப்பத்தில் குறிப்பிட்ட மொழியினை மாற்ற அனுமதியளிக்கப்பட மாட்டாது. அனைத்து விண்ணப்பதாரிகளும் இரண்டு வினாத்தாள்களுக்கும் தோற்றுதல் அவசியமாகும்.

(ஆ) பரீட்சைக் கட்டணம் ரூபா 1,000 ஆகும். பரீட்சைக் கட்டணம், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு இல. 2003-02-13 இற்கு வரவு வைக்கப்படுமாறு நாட்டின் எந்தவொரு பிரதேச/மாகாண செயலாளர் அலுவலகத்திலேனும் பணமாகச் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பத்தில் குறிக்கப்பட்ட இடத்தில் கழறாதவாறு ஒட்டவும். அப்பற்றுச்சீட்டின் நிழற்பிரதியினை தன்னகத்தே வைத்திருத்தல் பயனுடையதாகும்.

(இ) பரீட்சைக்காக செலுத்தப்படும் பணம் எந்தவொரு காரணத்திற்காகவும் மீளச் செலுத்தப்பட மாட்டாது.

(ஈ) இப்பரீட்சை 2014, ஏப்பிறல் மாதம் நடைபெறும். பரீட்சை நடத்தப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

(உ) பூரணமற்ற விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

**குறிப்பு**.- அனுமதி அட்டை இன்றி பரீட்சை மண்டபத்திற்குள் நுழைய அனுமதி வழங்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரி தனக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்கு தோற்ற வேண்டும். அனைத்து விண்ணப்பதாரிகளும் முதலாவதாக பரீட்சை மண்டபத்திற்குள் நுழையும்போது தமது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட பரீட்சை அனுமதி அட்டையை பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும். மேலும் பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுவதன் மூலம் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவசியமான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளார் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதற்கான சான்றாகக் கருதப்படக் கூடாது.

(ஊ) விண்ணப்பப்படிவம் செ. மீ. 22-29 அளவில் ஏ4 அளவிலான தாளில் தயாரிக்கப்படுதல் வேண்டும். இல. 1 முதல் 5 வரையிலான விடயங்கள் முதலாம் பக்கத்திலும் 6 தொடக்கம் 11 வரையான விடயங்கள் இரண்டாம் பக்கத்திலும் உள்ளடங்குமாறு விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படுவதோடு அவ்விண்ணப்பமானது விண்ணப்பதாரியின் தெளிவான கையெழுத்தினால் நிரப்பப்படுதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்படாத விண்ணப்பப் படிவங்களும் தகவல்கள் முழுமையாக குறிப்பிடப்படாத விண்ணப்பப் படிவங்களும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். அவ்விண்ணப்பப்படிவத்தின் படிமப் பிரதியொன்றை தன்னகத்தே வைத்திருத்தல் பயனுடையதாகும். மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதை விண்ணப்பதாரி சோதித்தறிதல் வேண்டும். மேலும் அவ்வாறு அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். இதனுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக விண்ணப்பத்தை தயாரிக்குக.

(எ) விண்ணப்பம் கிடைக்கப்பெற்றமை தொடர்பாக அறிவிக்கப் படாததுடன், எல்லா வகையிலும் முழுமையான விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரிகளின் பொருட்டு பரீட்சை ஆணையாளரினால் அனுமதி அட்டை வழங்கப்படும். விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை வழங்கப்பட்டதுடன் அது தொடர்பாக குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தலொன்று வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்களில் அனுமதி அட்டை கிடைக்கப் பெறவில்லை எனில் அறிவித்தலில் குறிக்கப்பட்டுள்ளபடி அது தொடர்பாக இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். தங்களிடம் வைத்துக்கொண்ட விண்ணப்பப்படிவத்தினதும் பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டினதும் உறுதிப்படுத்தப்பட்ட நிழற்பிரதிகளையும் பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்பட்ட பற்றுச்சீட்டையும் கொழும்பிலிருந்து வெளிப்பிரதேசம் எனில் அனுமதி அட்டையை அனுப்பி வைப்பதன் பொருட்டு தொலைநகல் இலக்கமொன்றையும் குறிப்பிட்டு தங்களின் வேண்டுகோள் கடிதத்துடன் பரீட்சைத் திணைக்களத்திற்கு தெரியப்படுத்துதல் மிகவும் பயனுள்ளதாக அமையும்.

(ஏ) அரச சேவை ஆணைக்குழுவின் விருப்பப்படி பரீட்சையை பிற்போடும் அல்லது இரத்துச் செய்யும் அதிகாரம் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கே உண்டு.

(ஐ) பரீட்சை நடாத்துதல் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்தி கீழ்படிதல் வேண்டும். அச்சட்டதிட்டங்களை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர்கள் உட்படவேண்டி ஏற்படும்.

10. **விண்ணப்பதாரியின் ஆளடையாளம்**.- பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்திப்படும் வண்ணம் தமது ஆளடையாளத்தை

பரீட்சார்த்திகள் உறுதிப்படுத்துதல் வேண்டும். கீழே குறிக்கப்பட்ட ஆவணங்களில் ஏதேனும் ஒன்று இதற்காக ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;
(இ) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

**கவனத்தில் கொள்ளப்படவேண்டியவை.**- (அ) விண்ணப்பப் படிவத்தில் எந்தவொரு ஆவணமோ அல்லது அதன் படிமப் பிரதியோ இணைக்கப்படுதல் கூடாது.

(ஆ கேட்கப்படும் சந்தர்ப்பத்தில் அவசியமான ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் தொடர்பில் கவனம் எடுக்கப்பட மாட்டாது.

அரச சேவையில்/மாகாண அரச சேவையில், அரச கூட்டுத் தாபனங்களில் சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பத்தினை திணைக்கள/நிறுவனத் தலைவரின் ஊடாக அனுப்புதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்ற முன்னர் அனைத்து விண்ணப்பதாரிகளும் தமது கையொப்பத்தினை அத்தாட்சிப்படுத்துதல் கட்டாயமாகும். நிறுவனத்தில் பணியாற்றும் விண்ணப்பதாரிகளின் கையொப்பம் நிறுவனத் தலைவரினால் அத்தாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும். அவ்வாறு அல்லாத ஏனைய விண்ணப்பதாரிகள் தமது கையொப்பத்தினை அரச பாடசாலை ஒன்றின் அதிபரினால்/ஓய்வுபெற்ற அதிபரினால், தமது பிரிவின் கிராம அலுவலரினால், சமாதான நீதவான் ஒருவரால், சத்தியப்பிரமாணம் பெற்ற ஆணையாளரால், சட்டத்தரணியால், பிரசித்த நொத்தாரிசினால், முப்படைகளின் ஆணையிடும் அதிகாரி ஒருவரால், வருடாந்தம் ரூபா 2,40,360 அல்லது அதற்கு மேல் திரட்டிய சம்பளமாகப் பெறும் அரச சேவையில் அல்லது மாகாண சேவையில் அல்லது நிலையான சேவையில் உயர் பதவிகளைக் கொண்ட ஒருவரால் அல்லது பௌத்த மடாலய தலைமை பிக்குவால் அல்லது தலைமை கிறிஸ்தவ பிதாவினால் அல்லது ஏனைய ஏதேனும் மத ஸ்தலங்களின் பொறுப்பான பதவியினை வகிக்கும் மதத் தலைவர் ஒருவரால் அத்தாட்சிப்படுத்துதல் வேண்டும்.

11. **வேண்டுமென்றே தவறான தகவல்கள் வழங்குவதற்கான தண்டனை.**- விண்ணப்பதாரி தகுதியற்றவர் எனத் தெரியவரும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்போ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்போ வேண்டிய எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது விண்ணப்பத்தை நிராகரிப்பதற்கு வாய்ப்பு உண்டு. விண்ணப்பதாரி சமர்ப்பித்த தகவல்கள் தெரிந்துகொண்டே தவறாக சமர்ப்பித்தது தெரியவந்தாலும், அல்லது ஏதாவது முக்கிய தகவல்களை வேண்டுமென்றே மறைத்திருந்தால் அவர் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு இடமுண்டு.

12. இந்த ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்படாத வேறு ஏதாவது ஒழுங்குவிதிகள் இருந்தால் அது சம்பந்தமாக அரச சேவை ஆணைக்குழுவின் ஆலோசனைப்படி கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் செயலாளரின் தீர்மானத்திற்கு அமைவாக செயற்படுத்தப்படும்.

13. காணப்படும் வெற்றிடங்கள் அனைத்தையும் அல்லது அதன் ஒரு பகுதியை நிரப்ப அல்லது நிரப்பாது விடுவதற்கான அதிகாரம் அரச சேவை ஆணைக்குழுவிற்கு உண்டு.

அரச சேவை ஆணைக்குழுவின் ஆணைப்படி,

அனுர சிரிவர்தன,
செயலாளர்,
கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு.

கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு,
2013, நவெம்பர் 23.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**இலங்கை தேசிய புலமைச்சொத்து அலுவலகத்தின் உதவிப் பணிப்பாளர் (சட்டம்) III ஆம் வகுப்பிற்கு உத்தியோகத்தர்களை சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2013**

Open Competitive Examination for Recruitment to Class III of the Assistant Director (Legal) 2013

மொழி மூலம் : பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 1
தமிழ் - 2
ஆங்கிலம் - 3
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

(இவ்வறிவித்தலின் 9(அ) பந்தியின் பிரகாரம் "மொழி மூலம்" பின்னர் மாற்ற இடமளிக்கப்பட மாட்டாது.)

1. 1.1 முதலெழுத்துக்களை இறுதியில் குறிப்பிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.
(உ-ம் : SILVA A. B.)
1.2 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.
1.3 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.
1.4 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

2. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.
2.2 அனுமதி அட்டை அனுப்பப்படவேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.

3. 3.1 பிறந்த திகதி :
ஆண்டு மாதம் திகதி
3.2 விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளும் திகதியன்று வயது :
வருடங்கள் மாதங்கள் நாட்கள்

4. பால் :
ஆண்-0, பெண்-1
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

5. இனம் :
(சிங்களம்-1, தமிழ்-2, முஸ்லிம்-3, இந்திய தமிழ்-4, ஏனையவை-5)
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

6. விவாகமானவரா/விவாகமாகாதவரா ?
விவாகமானவர்-1
விவாகமாகாதவர்-2
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

7. பட்டம் பற்றிய விபரம் :
7.1 பல்கலைக்கழகம்/நிறுவனம் :----.
7.2 பதிவிலக்கம் :----.
7.3 பட்டத்தின் பெயர் :----.
7.4 பட்டம் வழங்கப்பட்ட திகதி :----.
7.5 சாதாரண/விசேட :----.
7.6 வகுப்பு :----.
7.7 பிரதான பாடம் :----.

8. பொருத்தமான வேறு கல்வித் தகைமைகள்/அனுபவம் உண்டாயின் (மேலதிக பட்டம்/டிப்ளோமா/வேறு மொழி தொடர்பான தகைமைகள் காணப்படின்) குறிப்பிடுக :.............................
.......................................................................................
.......................................................................................
.......................................................................................

9. கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டை இங்கு ஒட்டவும் :
பற்றுச்சீட்டு இலக்கம் :----.
கட்டணம் செலுத்தப்பட்ட அலுவலகம் :----.
திகதி :----.

| (பற்றுச்சீட்டினை இக்கூட்டினுள் கழறாதவாறு ஒட்டவும்) |
|---|

10. **விண்ணப்பதாரரின் கூற்று** :
குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் அமைய உண்மையானது. மேலும் பரீட்சை ஆணையாளரினால் பரீட்சை நடாத்துதல் தொடர்பில் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பில் எடுக்கப்படும் முடிவுகளுக்கும் உட்படுவதாகத் தெரிவிக்கின்றேன். மேலும் இப்பரீட்சை தொடர்பான நிபந்தனைகளுக்கு அமைய நான் தகைமையற்றவர் எனத் தெரியவரும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும்போது அல்லது அதன் பின்னர் எனது பரீட்சார்த்தி அந்தஸ்து இரத்துச்செய்ய எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு நான் இணங்குகிறேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

11. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**
(இப்பந்தி அறிவித்தலின் 10 இன் பிரகாரம் அமைய வேண்டும்.) :
இவ்விண்ணப்பத்தை முன்வைக்கும் .................................. ...................... (முழுப்பெயர்) என்பவரை நான் தனிப்பட்ட வகையில் அறிவேன் எனவும் அவரது கையொப்பத்தை ........................ ஆந் திகதி என் முன்னிலையில் இட்டார் எனவும் உறுதிப்படுத்து கின்றேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
பதவி முத்திரை :----.
திகதி :----.

12-612

---

## இலங்கை நிர்வாக சேவை, இலங்கை பொறியியலாளர் சேவை, இலங்கை விஞ்ஞான சேவை மற்றும் இலங்கை கட்டிடக் கலைஞர் சேவை ஆகியவற்றில் உள்ள அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையும் இரண்டாம் மொழி தொடர்பான பரீட்சையும் -2013 (II)

## இலங்கை நிர்வாக சேவையில் உள்ள அலுவலர்களுக்கான இரண்டாம் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையும் - 2013 (II)

இலங்கை நிர்வாக சேவை, இலங்கை பொறியியலாளர் சேவை, இலங்கை விஞ்ஞான சேவை மற்றும் இலங்கை கட்டிடக் கலைஞர் சேவை ஆகியவற்றில் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை மற்றும் இரண்டாம் மொழிப் பரீட்சை என்பன அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கண்காணிப்பு, வழிநடாத்தல் என்பவற்றின்கீழ் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனப் பணிப்பாளரால் 2014, சனவரி மாதம் 18 ஆந் திகதி தொடக்கம் 2014, பெப்புருவரி மாதம் 02 ஆந் திகதிவரை வார இறுதி நாட்களில் கொழும்பில் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. மேற்படி சேவைகளுக்கு ஏற்புடையதாக நடாத்துவதற்குரிய வினைத்திறன்காண் தடைப்பரீட்சைகள் மற்றும் இரண்டாம் மொழி தொடர்பான பரீட்சைகள் கீழ்குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும் :-

| தொடர் இலக்கம் | பரீட்சையின் பெயர் | குறியீடு |
|---|---|---|
| 1 | இலங்கை நிர்வாக சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன் காண் தடைப்பரீட்சை மற்றும் இரண்டாவது மொழிப் பரீட்சை | SLAS |
| 2 | இலங்கை பொறியியலாளர் சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன் காண் தடைப்பரீட்சை மற்றும் இரண்டாவது மொழிப் பரீட்சை | SLES |
| 3 | இலங்கை விஞ்ஞான சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன் காண் தடைப்பரீட்சை மற்றும் இரண்டாவது மொழிப் பரீட்சை | SLSS |
| 4 | இலங்கை கட்டிடக் கலைஞர் சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன் காண் தடைப்பரீட்சை மற்றும் இரண்டாவது மொழிப் பரீட்சை | SLArS |
| 5 | இலங்கை நிர்வாக சேவையின் அலுவலர்களுக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை | SLAS 2 |

3. அலுவலர் தாம் விரும்பினால் ஒவ்வொரு பாடத்திற்கு வெவ்வேறாகவும் வெவ்வேறான அமர்வுகளிலும் தோற்றலாம். ஆயினும் விதித்துள்ள காலப்பகுதியில் வினைத்திறமை காண் தடைப்பரீட்சையில் சித்தியடைதல் அத்தியாவசியமாகும்.

4. இப்பரீட்சை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளரால் நடாத்தப்படுவதுடன் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக அவரால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்படிதல் வேண்டும். இச்சட்டதிட்டங்களை மீறினால் ஒழுக்காற்று அதிகாரியால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு ஆளாதல் வேண்டும்.

5. இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.slida.lk என்பதன் மூலம் இணையத்தள இணைப்பின் ஊடாகவே பரீட்சைக்கான விண்ணப்பங்கள் விண்ணப்பிக்கப்பட முடியும். www.slida.lk என்ற பிரதான பட்டியில் (Menu) இருந்து "பரீட்சைகள்" என்ற துணைப் பட்டியினை திறப்பதன் ஊடாக உரிய பரீட்சையினை தெரிவுசெய்து பரீட்சைக்கான விண்ணப்பங்களை நிரப்ப ஆரம்பித்தல் சாத்தியமாகும். விண்ணப்பங்களை நிரப்புதல் 2013.12.13 ஆந் திகதி மு. ப. 8.00 மணியிலிருந்து 2014.01.03 ஆந் திகதி நடுநிசி 12.00 மணிவரையான காலப்பகுதியிலேயே அனுமதிக்கப்படுகிறது.

6. பரீட்சைக் கட்டணங்கள்.- முதல் தடவையாகப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்த வேண்டியதில்லை. அதன் பின்னரான அமர்வுகளில் அலுவலர்கள் பின்வரும் விதத்தில் பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்த வேண்டும். முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை மற்றும் இரண்டாவது மொழித் தேர்ச்சிப் பரீட்சை என்பன ஒரு பரீட்சையாகவும், இரண்டாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை வேறொரு பரீட்சையாகவும் கருதி இலங்கை நிருவாக சேவையிலுள்ள அலுவலர்கள் பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்துதல் வேண்டும். அதற்கிணங்க, முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை மற்றும் இரண்டாவது மொழித் தேர்ச்சிப் பரீட்சையின் ஒன்றுக்கு மேற்பட்ட பாடங்களுக்காக விண்ணப்பிக்கப்படின் ரூ. 1,000 செலுத்தப்படுதல் வேண்டும். இரண்டாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையின் ஒன்றுக்கு மேற்பட்ட பாடங்களுக்காக விண்ணப்பிக்கப்பட்டிருப்பின் ரூ. 1,000 செலுத்தப்படுதல் வேண்டும். முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையின் ஒரு பாடத்திற்காக மட்டும் விண்ணப்பிக்கப்படின் 500 ரூபா செலுத்தப்படுதல் வேண்டும் என்பதும் இரண்டாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையின் ஒரு பாடத்திற்காக மட்டும் விண்ணப்பிக்கப்படின் 500 ரூபா செலுத்தப்பட வேண்டும்.

இலங்கை பொறியியல் சேவை, இலங்கை விஞ்ஞான சேவை மற்றும் கட்டிடக் கலைஞர் சேவையிலுள்ள அலுவலர் முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையின் ஒன்றுக்கு மேற்பட்ட பாடங்களுக்கு விண்ணப்பித்தால் ரூ. 1,000 செலுத்துதல் வேண்டும் என்பதுடன் அவர்கள் ஒரு பாடத்திற்காக மட்டும் தோற்றினால் ரூ. 500 செலுத்தப்பட வேண்டும். SLADA கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு நாடு முழுவதிலுமுள்ள ஏதேனுமொரு அஞ்சல் அலுவலகத்தில் (உப அஞ்சல் அலுவலகங்கள் நீங்கலாக) மூலம் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டின் இலக்கம் விண்ணப்பத்தின் உரிய கூட்டில் குறிப்பிடப்படல் வேண்டும். SLADA கணக்கிற்கு பணத்தினைச் செலுத்துவதற்காக உள்நாட்டு தந்திக் காசுக் கட்டளை விண்ணப்பத்தினை (அ. அ. சி. 85) நிரப்பும்போது 'SLADA' என்பது பெறுநராகக் குறிப்பிடப்பட வேண்டும். அதேவேளை உரிய பரீட்சையின் குறியீட்டுப் பெயரானது பெறுநரின் முகவரிக்கான இடத்தில் குறிப்பிடப்படல் வேண்டும். (பிரிவு 2 இல் குறிப்பிடப்பட்டவாறு குறியீட்டுப் பெயர்கள் அமைதல் வேண்டும்.) மேலும் கணக்கிற்கு பணத்தினை வரவு வைக்கும்போது அனுப்புவராக விண்ணப்பதாரியின் பெயரினையும் அனுப்புபவரின் முகவரிக்கான இடத்தில் விணணப்பதாரியின் தே. அ. அ. (NIC) இலக்கத்தையும் உள்ளடக்கி விண்ணப்பமானது நிரப்பப்படுதல் வேண்டும்.

7. இணைய இணைப்பில் நிரப்பப்பட்ட விண்ணப்பம் சமர்ப்பிக்கும்போது பரீட்சார்த்திகளுக்கு உறுதிப்படுத்தல் இலக்கம் (Confirmation Number) ஒன்று வழங்கப்படும் என்பதுடன் பரீட்சார்த்தி பின்னர் எழும் விசாரணைகளுக்காக அதனை வைத்திருத்தல் வேண்டும். உரியவாறு பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பமானது, இணைய இணைப்பில் அனுப்பப்பட்டவுடன் பரீட்சார்த்தி அனுகுவழியினைக் கொண்டிருக்கும் இணையப் பக்கத்தில் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களை பின்பற்றுவதன் மூலம் அவர்களின் பரீட்சை அனுமதி அட்டைகளை பெற்றுக்கொள்வதற்கு பரீட்சார்த்திகளால் இயலும். பரீட்சார்த்தி அனுமதி அட்டையின் அச்சிடப்பட்ட பிரதி ஒன்றினைப் பெறல் வேண்டும் என்பதுடன் உரிய திணைக்களத் தலைவரினால் அல்லது அந்த நோக்கத்திற்காக தலைவரினால் அங்கீகரிக்கப்பட்ட பிரதித் தலைவரினால் சான்றுப்படுத்தி தனது கையொப்பத்தினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். இந்த விதத்தில் பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

8. விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான செய்முறை தொடர்பிலான ஏதேனும் தெளிவூட்டல் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் 011-5980236 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக பெற்றுக்கொள்ளப்பட முடியும்.

2013.12.13 ஆந் திகதியிலிருந்து 2014.01.03 ஆந் திகதிவரை வாரத்தின் வேலை நாட்களில் மு. ப. 8.30 மணியிலிருந்து பி. ப. 4.30 மணிவரை இந்த இணைப்பின் ஊடாக தொடர்பாடல் மேற்கொள்ளப்பட முடியும்.

9. அனுமதி அட்டைகளைக் கொண்டிருக்கும் அலுவலர்களுக்கு அவர்களால் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இயலுமைப்படுத்தி கடமை விடுமுறையினை திணைக்களத் தலைவர் வழங்குதல் வேண்டும். விண்ணப்பதாரிகளுக்கு அவர்களின் பரீட்சார்த்தித் தன்மை உறுதிப்படுத்திப் பெறவேண்டியதாக இருந்தால் 011-5980236 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக இதனைச் செய்துகொள்ள முடியும். பரீட்சைக்குத் தோற்றுவதற்காக பரீட்சார்த்திகளுக்கு போக்குவரத்துச் செலவினங்கள் வழங்கப்பட மாட்டாது.

10. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்.**- பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின்போதும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும் :-

(I) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

(II) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

மேற்படி ஆவணமொன்றைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி யொருவரின் பரீட்சார்த்த உரிமை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனப் பணிப்பாளரின் தற்றுணிபின்படி இரத்துச்செய்யப்படும்.

11. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் இப்பரீட்சை நடாத்தப்படுவதுடன் ஏதேனுமொரு பரீட்சார்த்தி தமக்கு உரித்தல்லாத மொழிமூலத்தில் பரீட்சைக்குத் தோற்றியுள்ளதாக பின்னர் வெளிவருமாயின் அவரது பரீட்சார்த்த உரிமை இரத்துச்செய்யப்படும்.

12. **பரீட்சைத் திட்டம்**.- ஒவ்வொரு வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைக்கான பாடங்கள் மற்றும் பாடவிதானங்கள் கீழ்குறிப்பிட்டுள்ள வாறாகும்.

12.1 இலங்கை நிர்வாக சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை மற்றும் இரண்டாம் மொழி பரீட்சை (2005.11.14 ஆந் திகதிய 1419/3 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை நிர்வாக சேவை பிரமாணக் குறிப்பு இணைப்பு "இ") :

இப்பரீட்சை பின்வரும் பாடங்களைக் கொண்டிருக்கும் :-

| தொடர் இலக்கம் | பாடம் | காலம் | பாட இலக்கம் |
|---|---|---|---|
| 1 | அரசியலமைப்புச் சட்டமும் நிர்வாகச் சட்டமும் | 3 மணித்தியாலங்கள் | 01 |
| 2 | இலங்கையில் சட்டமுறைகள் | 3 மணித்தியாலங்கள் | 02 |
| 3 | குற்றவியற் சட்டமும் சான்றுச் சட்டமும் | 3 மணித்தியாலங்கள் | 03 |
| 4 | நிர்வாகம் | 3 மணித்தியாலங்கள் | 04 |
| 5 | பொருளியல் | 3 மணித்தியாலங்கள் | 05 |
| 6 | சமூகவியல் | 3 மணித்தியாலங்கள் | 06 |
| 7 | ஆங்கிலம் | 3 மணித்தியாலங்கள் | 07 |

12.1.1 அரசியலமைப்புச் சட்டமும் நிர்வாகச் சட்டமும் (பாட இலக்கம் 01).- கீழ்க்குறிப்பிடப்படும் விடயங்களைக் கொண்டமைந்த வினாத்தாளாகும் :-

(i) வரலாற்று ரீதியிலான அபிவிருத்தி அடங்கலாக இலங்கை அரசியலமைப்பின் அமைவும் இரண்டாவது குடியரசு அரசியலமைப்பும்

(ii) நிறைவேற்றுத்துறை, குடியரசின் சனாதிபதி, அமைச்சரவை, பிரதம மந்திரி மற்றும் மத்திய அரசின் திணைக்களங்களும் அரச சேவையும்

(iii) நீதி நிர்வாகம்

(iv) நிர்வாகத்துடன் தொடர்பான நீதிமன்ற நிர்வாகம்

(v) அரச கொள்கைகளுக்கான வழிகாட்டி கொள்கைகளும் அடிப்படைக் கடமைகளும்

(vi) கையளியதிகார வழிச்சட்டம்

(vii) அரசினதும் அரச அதிகார சபைகளதும் பொறுப்புக்கள்

(viii) அடிப்படை உரிமைகள்

12.1.2 இலங்கையில் சட்ட முறைகள் (பாட இலக்கம் 02) :- கீழ்க்குறிப்பிடப்படும் விடயங்களைக் கொண்டமைந்த வினாத் தாளாகும் :-

(i) இலங்கையின் சட்ட வரலாறு

(ii) நீதிமன்ற அமைப்பு

(iii) இலங்கை நீதிமன்ற கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 6)

(iv) 1971 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க நீதி நிர்வாகச் சட்டம்

12.1.3 குற்றவியல் சட்டமும் சான்றுச் சட்டமும் (பாட இலக்கம் 03) :- கீழ்க்குறிப்பிடப்படும் விடயங்களைக் கொண்டமைந்த வினாத்தாளாகும் :-

(i) தண்டனைச் சட்டக்கோவை

(ii) சான்றுக் கட்டளைச் சட்டம்

**குறிப்பு**.- பரீட்சார்த்தியொருவர் மேற்படி 13.1.1, 13.1.2 மற்றும் 13.1.3 இல் குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு பாடத்திற்கும் ஆகக்குறைந்தது 35 வீதப் புள்ளிகளையும் மூன்று பாடங்களின் மொத்தப் புள்ளிகளில் சராசரியாக 40 வீதத்தையும் பெறுதல் வேண்டும்.

12.1.4 நிர்வாகம் (பாட இலக்கம் 04).- கீழ்க்குறிப்பிடப்படும் விடயங்களைக் கொண்டமைந்த வினாத்தாளாகும் :-

(i) அலுவலகங்கள், வெளிக்கள நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தல் மற்றும் அமைப்பாண்மை முறைகள்.
(ii) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் 2009.02.20 ஆந் திகதிய 1589/30 ஆம் இலக்க அரசாங்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட நடைமுறை விதிகள் மற்றும் தாபன விதிக்கோவையின் பின்வரும் அத்தியாங்கள் :

VI, VII, IX, XI, XXIII, XXV, XXVI, XXVII, XXVIII, XXIX, XXX, XXXI, XXXII, XXXIII, XLVII மற்றும் XLVIII.

**குறிப்பு**.- இப்பாடத்திற்காக பரீட்சார்த்தியொருவர் ஆகக்குறைந்தது 40 வீத புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

12.1.5 பொருளியல் (பாட இலக்கம் 05)/சமூகவியல் (பாட இலக்கம் 06) - பரீட்சார்த்திகள் பொருளியல் அல்லது சமூகவியல் ஆகிய பாடங்களில் ஒரு பாடத்திற்கு மட்டும் தோற்றுதல் வேண்டும்.

12.1.5.1 பொருளியல் (பாட இலக்கம் 05) - கீழ்க்குறிப்பிடப்படும் விடயங்களைக் கொண்டமைந்த வினாத்தாளாகும் :-

(i) பெறுமானம், உற்பத்தி விநியோகத்தின் கொள்கைகளின்பால் விசேட கவனத்துடன் பொருளியல் கோட்பாடுகள்
(ii) நிதி, நிதி அலுவல்களும் நிதிக் கோட்பாடுகளும்
(iii) இலங்கை பொருளாதார அமைவு

**குறிப்பு**.- இப்பாடத்திற்காக பரீட்சார்த்தியொருவர் ஆகக்குறைந்தது 40 வீத புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

12.1.5.2 சமூகவியல் (பாட இலக்கம் 06) - இலங்கை பற்றிய முக்கிய கவனத்துடன் பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினாத்தாள் :

(i) சமூக அமைவும், அமைப்பாண்மையும் பணிகளும்
(ii) மானிட உறவுகளும், குழுக்களும்
(iii) உறவு முறை, திருமணம் மற்றும் குடும்பம்
(iv) கிராமிய நகர்ப்புறச் சமூகம்
(v) சமூக நிலைகளும் ஏற்றத்தாழ்வுகளும்
(vi) சமூக கட்டுப்பாடு
(vii) கலாசாரம், சமயம், ஒழுக்கம் மற்றும் பெறுமதிகள்

**குறிப்பு**.- இப்பாடத்திற்காக பரீட்சார்த்தியொருவர் ஆகக்குறைந்தது 40 வீத புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

12.1.6 ஆங்கிலம் (பாட இலக்கம் 07) - இப்பாடத்திற்கு ஏற்புடையதான பாடவிதானம் கீழ்குறிப்பிட்டுள்ளவாறாகும் :-

***(i) Listening & Speaking Skills***

The candidate should possess the ability to function effectively in the following language functions :-

- General Greetings and Introductions
- Giving and Getting Information
- Advising, Suggesting and Expressing Opinions
- Describing Events and Situations
- Telephone skills
- Interviewing skills
- Meeting
- Listening and Note taking skills

***(ii) English Grammar***

A suitable level of proficiency on the following forms of grammar in the Spoken and the Written language is expected from the candidate :-

- Tense and Number
- Sentences (Simple/Compound/Complex/Compound Complex)
- Relative Clauses
- Reported Speech
- Adjectives & Adverbs
- Determiners
- Prepositions

*(iii)* ***Writing Skills***

The knowledge on the modern formats and styles of writing is tested in this area of study :

- Internal modes of Communication
- Formal Correspondence skills
- Writing Descriptions/Explanations
- Summary writing skills
- Report Writing skills
- Meeting Minutes/Agendas/Invitations
- Comprehension

*(iv)* ***Reading Skills***

Candidate's ability to comprehend a printed text, infer meaning and verbal/written interpretation is expected :

- Reading and understanding the specific and general meaning of a printed text
- Reading and Interpretation (verbal/written)
- Understanding the cohesion and coherence of a passage

12.1.7 இரண்டாம் மொழிப் பரீட்சை.- இப்பரீட்சைகள் எழுத்துப் பரீட்சை மற்றும் வாய்மூலப் பரீட்சை என்றவாறு இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது. எழுத்துப் பரீட்சையில் சித்தியெய்தும் பரீட்சார்த்திகள் மட்டுமே உரிய பாடத்துடன் ஒத்திருக்கும் வாய்மூலப் பரீட்சைக்காக அழைக்கப்படுபவார்கள். எழுத்துப் பரீட்சைக்கான பாடங்கள் பின்வருமாறு :-

| பாடம் | காலம் | பாட எண் |
|---|---|---|
| இரண்டாம் மொழிப் பரீட்சை - சிங்களம் | 2 மணித்தியாலங்கள் | 13 |
| இரண்டாம் மொழிப் பரீட்சை - தமிழ் | 2 மணித்தியாலங்கள் | 14 |
| இரண்டாம் மொழிப் பரீட்சை - ஆங்கிலம் | 2 மணித்தியாலங்கள் | 15 |

**குறிப்பு**.- சிங்கள மொழி மூலத்தில் நியமிக்கப்பட தகுதிவாய்ந்த அலுவலர் தொடர்பில் இரண்டாவது மொழி தமிழாக இருத்தல் வேண்டும். தமிழ் மொழி மூலத்தில் நியமிக்கப்பட தகுதிவாய்ந்த அலுவலர் தொடர்பில் இரண்டாவது மொழி சிங்களமாக இருத்தல் வேண்டும். அதேவேளை, ஆங்கில மொழியில் நியமிக்கப்பட தகுதிவாய்ந்த அலுவலர் சிங்களம் மற்றும் தமிழ் மொழிப் பரீட்சைகளில் சித்தியெய்தும்படி கேட்கப்படுகின்றார்.

12.2 இலங்கை பொறியியல் சேவை, இலங்கை விஞ்ஞான சேவை மற்றும் இலங்கை கட்டிடக் கலைஞர் சேவை என்பவற்றிலுள்ள அலுவலர்களுக்கான முதலாம் வினைத்திறன்காண் தடைப் பரீட்சை :

இப்பரீட்சைக்கான பாடங்கள் கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறாகும் :

| பாடம் | காலம் | பாட இலக்கம் |
|---|---|---|
| நிதி முறைமைகள் | 3 மணித்தியாலங்கள் | 12 |
| நிர்வாகம் | 3 மணித்தியாலங்கள் | 04 |

12.2.1 நிதி முறைமைகள் (பாட இலக்கம் 12).- பின்வரும் விடயங்களின் அடிப்படையில் வினாக்களை உள்ளடக்கிய ஒரு வினாப்பத்திரம் :

(i) இலங்கை அரசாங்க நிதிப் பிரமாணங்கள்.- தொகுதி I (அத்தியாயம் X தவிர)

(ii) நடப்பு ஆண்டின் மதிப்பீடுகள்- உதாரணம் : மதிப்பீடுகள் தயார்படுத்தல், செலவினத் தலைப்புக்கள், நிதி முறைமைகள் மற்றும் ஒதுக்கீட்டுச் சட்டங்கள்

குறிப்பு.- இப்பாடத்திற்காக பரீட்சார்த்தியொருவர் ஆகக்குறைந்தது 40% மான புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

12.2.2 நிர்வாகம் (பாட இலக்கம் 4).- பின்வரும் விடயங்களின் அடிப்படையில் வினாக்களை உள்ளடக்கிய ஒரு வினாப்பத்திரம் :

அலுவலக மற்றும் கள ஒழுங்கமைப்பு மற்றும் முறைகள்.- 2009.02.20 ஆந் திகதிய 1589/30 ஆம் இலக்க அரசாங்கத்தின் அதிவிசேட வர்த்தமானியில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட நடைமுறை விதிகள் மற்றும் தாபன விதிக்கோவையின் பின்வரும் அத்தியாயங்கள் (அத்தியாயங்கள் VI, VII, IX, XI, XXIII, XXV, XXVI, XXVII, XXVIII, XXIX, XXX, XXXI, XXXII, XXXIII, XLVII மற்றும் XLVIII)

**குறிப்பு**.- இப்பாடத்திற்காக பரீட்சார்த்தியொருவர் ஆகக்குறைந்தது 40% மான புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

12.2.3 இரண்டாம் மொழிப் பரீட்சை.- எழுத்துப் பரீட்சை மற்றும் வாய்மூலப் பரீட்சை என்றவாறு இரண்டு பகுதிகளை இப்பரீட்சை கொண்டுள்ளது. எழுத்துப் பரீட்சையினை சித்தியெய்தும் பரீட்சார்த்திகள் மட்டும் உரிய பாடத்துடன் ஒத்த வாய்மூலப் பரீட்சைக்காக அழைக்கப்படுவார்கள். எழுத்துப் பரீட்சைக்கான பாடங்கள் கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறாகும் :-

| பாடம் | காலம் | பாட இலக்கம் |
|---|---|---|
| இரண்டாம் மொழிப் பரீட்சை - சிங்களம் | 2 மணித்தியாலங்கள் | 13 |
| இரண்டாம் மொழிப் பரீட்சை - தமிழ் | 2 மணித்தியாலங்கள் | 14 |
| இரண்டாம் மொழிப் பரீட்சை - ஆங்கிலம் | 2 மணித்தியாலங்கள் | 15 |

குறிப்பு.- சிங்கள மொழி மூலத்தில் நியமிக்கப்பட தகுதிவாய்ந்த அலுவலர் தொடர்பில் இரண்டாவது மொழி தமிழாக இருத்தல் வேண்டும். தமிழ் மொழி மூலத்தில் நியமிக்கப்பட தகுதிவாய்ந்த அலுவலர் தொடர்பில் இரண்டாவது மொழி சிங்களமாக இருத்தல் வேண்டும். அதேவேளை, ஆங்கில மொழியில் நியமிக்கப்பட தகுதிவாய்ந்த அலுவலர் சிங்களம் மற்றும் தமிழ் மொழிப் பரீட்சைளைச் சித்தியெய்தும்படி கேட்கப்படுவார்.

12.3 இலங்கை நிர்வாக சேவையின் அலுவலர்களுக்கான இரண்டாம் வினைத்திறன்காண் தடைப்பரீட்சை (2005.11.14 ஆந் திகதிய 1419/3 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை நிர்வாக சேவை பிரமாணக் குறிப்பு அத்தியாயம் "ஈ") இப்பரீட்சைக்கான பாடங்கள் கீழ்குறிப்பிட்டுள்ளவாறாகும் :-

| தொடர் இலக்கம் | பாடம் | காலம் | பாட இலக்கம் |
|---|---|---|---|
| 1 | பொருளியலும் சமூகவியற் கொள்கையும் (இலங்கை மீது முக்கிய கவனத்துடன்) | 3 மணித்தியாலங்கள் | 08 |
| 2 | அபிவிருத்தி நிருவாக நடைமுறை (இலங்கை மீது முக்கிய கவனத்துடன்) | 3 மணித்தியாலங்கள் | 09 |
| 3 | முகாமைத்துவமும் அமைப்பு முறைகளும் | 3 மணித்தியாலங்கள் | 10 |
| 4 | அரசாங்க துறையின் நிதி முகாமைத்துவம் | 3 மணித்தியாலங்கள் | 11 |

12.3.1 பொருளியலும் சமூகவியற் கொள்கைகளும் (இலங்கை மீது முக்கிய கவனத்துடன்) :- (பாட இலக்கம் 08).- இலங்கையில் பொருளாதாரச் சமூகக் கொள்கைகளை வடிவமைத்து அதை திரிபுறச் செய்யும் காரணிகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினாத்தாளாகும். இது இலங்கையின் அண்மைக்கால பொருளாதார, சமூக, அரசியல், வரலாற்றில் பொருளியல் மற்றும் சமூகவியல் கோட்பாடுகளைப் பிரயோகித்தல் தொடர்பானதாக விடயங்களைக் கொண்டமைந்திருக்கும்.
**குறிப்பு**.- இப்பாடத்திற்காக பரீட்சார்த்தியொருவர் ஆகக்குறைந்தது 40% புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

12.3.2 அபிவிருத்தி நிர்வாக நடைமுறை (இலங்கை மீது முக்கிய கவனத்துடன்) - (பாட இலக்கம் 09).- இலங்கையின் மீது விசேட கவனம் செலுத்தி பின்வரும் விடயங்களை உள்ளடக்கி அபிவிருத்தி நிர்வாகத்திற்குப் பொறுப்பான நிறுவனங்கள் அவற்றின் இயக்கம் மற்றும் அவற்றிற்கிடையிலான தொடர்புகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினாத்தாளாகும் :-

(i) இலங்கையில் அரசாங்க அமைப்பு
(ii) இலங்கை அரசாங்க அமைப்பின் அரசியலமைப்புப் பின்னணி
(iii) மாகாண சபைகளும் உள்ளூராட்சி நிறுவனங்களும்
(iv) மக்கள் அமைப்புக்கள்
(v) அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள்

**குறிப்பு**.- இப்பாடத்திற்காக பரீட்சார்த்தியொருவர் ஆகக்குறைந்தது 40% புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

12.3.3 முகாமைத்துவமும் அமைப்பு முறைகளும்- (பாட இலக்கம் 10).- பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்ட வினாத்தாளாகும் :-

(i) முகாமைத்துவமும் அமைப்பும் பற்றிய கோட்பாடுகளும்
(ii) அரச துறையில் எழுகின்ற பிரச்சினைகள் மற்றும் விடயங்களுக்கு இக்கோட்பாடுகளைப் பிரயோகித்தல்
(iii) முகாமைத்துவம் பற்றிய நவீன திறமுறைகளும் செயல்நுட்பங்களும்.
**குறிப்பு**.- இப்பாடத்திற்காக பரீட்சார்த்தியொருவர் ஆகக்குறைந்தது 40% புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

*12.3.4 அரச துறையின் நிதி முகாமைத்துவம்- (பாட இலக்கம் 11).- பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினாத்தாள் ஆகும் :*

(i) இலங்கையின் நிதிக் கட்டுப்பாடு-
அரசாங்க நிதி முகாமைத்துவத்திற்கு ஏற்புடைய சட்டப்படியான ஏற்பாடுகள்
அரசாங்க நிதி குறித்து பாராளுமன்றத்தின் கட்டுப்பாடு
நிதியம் என்பதன் கருத்து
திரட்டிய நிதியமும் அதன் செயற்பாடும்
ஒதுக்கீட்டின் நோக்கமும் ஒதுக்கீட்டு முறைகளும்
ஐயத்திற்குரிய நிதியம்
பிற நிதிகளும் அவற்றின் செயற்பாடுகளும்
அரசாங்க வருமானம்
நிதி அமைச்சரின் அதிகாரங்கள், வேலைப்பளு மற்றும் பொதுத் திறைசேரியின் அதிகாரங்கள், வேலைப்பளு
ஆணைச்சீட்டுக்களும் கட்டுநிதிய அதிகாரமும்
கணக்காய்வாளர் தலைமை அதிபதி, அவரின் அதிகாரங்கள் மற்றும் வேலைப்பளு
அரசாங்க செலவினக் குழு
அரசாங்க தொழில் முயற்சிக்குழு

(ii) கணக்கீட்டு அலுவலர்கள், தலைமை கணக்கீட்டு அலுவலர்கள் மற்றும் அரசாங்க வருமானம் தொடர்பாக கணக்கீட்டு அலுவலர்கள் ஆகியோரை நியமித்தல், அவர்களின் அதிகாரங்கள் மற்றும் வேலைப்பளு

(iii) உள்ளகக் கணக்காய்வு

(iv) அரசாங்க செலவுகளைத் திட்டமிடலும் முகாமைத்துவமும்,
அமைப்புக்களின் நோக்கங்கள் மற்றும் கடமை பொறுப்புக்கள் என்பனவற்றை இனங்காணுதல்
அரசாங்கக் கொள்கைகள், குறிக்கோள்கள், இலக்குகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை இனங்காணுதல்
அபிவிருத்திக் கருத்திட்டங்கள், நிகழ்ச்சித் திட்டங்களைத் திட்டமிடல், தரங்கணிப்பிடல் மற்றும் முன்னுரிமை வழங்குதல்
வருடாந்த வருமான மற்றும் செலவு மதிப்பீடுகளைத் தயாரித்தல், இறுதித் தீர்மானம் எடுத்தல்

(v) அங்கீகரிக்கப்பட்ட செலவு மதிப்பீடுகளில் மாற்றங்களை செய்தல், வீரமொங் திட்டத்தைச் செயற்படுத்தல், அரச துறையின் பதவியணிகள் மற்றும் சம்பளங்களை முகாமை செய்தல், மொத்த ஆகுசெலவு மதிப்பீடுகளும் அவற்றை மீளமைத்தலும், குறைநிரப்பு மதிப்பீடுகள்

(vi) அரச உடைமைகளின் நட்டங்களும் தவிர்வும்

(vii) பல்வேறு கணக்கு அலுவல்கள்

(viii) நிதி முகாமைக்காக வேலைப்பளுவை பொறுப்பளித்தல்

(ix) அரசாங்க நிதிகளின் பொறுப்பும் வங்கிக் கணக்கும் நடைமுறையும்

(x) அரசாங்க விநியோக நடைமுறை.-
பொருட்கள், சேவைகள் மற்றும் வேலைகளை பெற்றுக்கொள்ளல், கேள்வி சபைகள் மற்றும் தொழிநுட்ப தரங்கணிப்பு குழுக்களின் அமைவு, நியமன அதிகாரங்களும் வேலைப்பளுவும் கேள்விகளை தரங்கணிக்கும் நடைமுறை, வெளிநாட்டு உதவிகளின் பேரில் செயற்படும் கருத்திட்டங்களின் முகாமைத்துவம்.
**குறிப்பு**.- இப்பாடத்திற்காக பரீட்சார்த்தியொருவர் ஆகக்குறைந்தது 40 வீத புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

13. இப்பரீட்சை நேரசூசி கீழ்குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும் :-

| தொடர் இலக்கம் | பரீட்சையின் பெயர் | பாடம் | பாட இலக்கம் | திகதி | நேரம் |
|---|---|---|---|---|---|
| 1 | இலங்கை நிர்வாக சேவையில் உள்ள அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன் காண் தடைப்பரீட்சை | அரசியலமைப்புச் சட்டமும் நிர்வாகச் சட்டமும் | 01 | 18.01.2014 | 9.00-12.00 |
| | | இலங்கையில் சட்ட முறைகள் | 02 | 18.01.2014 | 13.00-16.00 |
| | | குற்றவியற் சட்டமும் சான்றுச் சட்டமும் | 03 | 19.01.2014 | 9.00-12.00 |
| | | நிர்வாகம் | 04 | 19.01.2014 | 13.00-16.00 |
| | | பொருளியல் | 05 | 25.01.2014 | 9.00-12.00 |
| | | சமூகவியல் | 06 | 25.01.2014 | 9.00-12.00 |
| | | ஆங்கிலம் | 07 | 25.01.2014 | 13.00-16.00 |
| 2 | இலங்கை பொறியியல் சேவையின் அலுவலர்களுக் கான முதலாவது வினைத் திறன்காண் தடைப்பரீட்சை | நிதி முறைகள் | 12 | 26.01.2014 | 9.00-12.00 |
| | | நிர்வாகம் | 04 | 19.01.2014 | 13.00-16.00 |

| தொடர் இலக்கம் | பரீட்சையின் பெயர் | பாடம் | பாட இலக்கம் | திகதி | நேரம் |
|---|---|---|---|---|---|
| 3 | இலங்கை விஞ்ஞான சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன் காண் தடைப்பரீட்சை | நிதி முறைகள் | 12 | 26.01.2014 | 9.00-12.00 |
| | | நிர்வாகம் | 04 | 19.01.2014 | 13.00-16.00 |
| 4 | இலங்கை கட்டிடக் கலைஞர் சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத் திறன் காண் தடைப்பரீட்சை | நிதி முறைகள் | 12 | 26.01.2014 | 9.00-12.00 |
| | | நிர்வாகம் | 04 | 19.01.2014 | 13.00-16.00 |
| 5 | இலங்கை நிர்வாக சேவை, இலங்கை பொறியியல் சேவை, இலங்கை விஞ்ஞான சேவை மற்றும் இலங்கை கட்டிடக் கலைஞர் சேவை என்பவற்றிலுள்ள அலுவலர்களுக்கான இரண்டாம் மொழிப் பரீட்சை | இரண்டாம் மொழித் தேர்ச்சிப் பரீட்சை - சிங்களம் | 13 | 02.02.2014 | 14.00-16.00 |
| | | இரண்டாம் மொழித் தேர்ச்சிப் பரீட்சை - தமிழ் | 14 | 02.02.2014 | 9.00-11.00 |
| | | இரண்டாம் மொழித் தேர்ச்சிப் பரீட்சை - ஆங்கிலம் | 15 | 02.02.2014 | 11.30-13.30 |
| 6 | இலங்கை நிர்வாக சேவையில் உள்ள அலுவலர்களுக்கான இரண்டாம் வினைத்திறன் காண் தடைப்பரீட்சை | பொருளியலும் சமூகவியற் கொள்கையும் | 08 | 26.01.2014 | 9.00-12.00 |
| | | அபிவிருத்தி நிருவாக நடைமுறை | 09 | 26.01.2014 | 13.00-16.00 |
| | | முகாமைத்துவமும் அமைப்பு முறைகளும் | 10 | 01.02.2014 | 9.00-12.00 |
| | | அரசாங்க துறையின் நிதி முகாமைத்துவம் | 11 | 01.02.2014 | 13.00-16.00 |

14. வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைக்கு ஏற்புடையதான பாடங்களில் இருந்து சித்தியடையும் தேவையை விலக்களித்தல் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும் :

| பரீட்சை | பாடம் | விலக்களிப்பதற்கு தேவைப்படும் தகைமைகள் |
|---|---|---|
| இலங்கை நிர்வாக சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை மற்றும் இரண்டாம் மொழிப் பரீட்சை | அரசியலமைப்புச் சட்டமும் நிர்வாகச் சட்டமும்<br>இலங்கையின் சட்டமுறைமைகள்<br>குற்றவியற் சட்டமும் சான்றுக் கட்டளைச் சட்டமும் | நியாய துரந்தரர் (Barrister), உயர் நீதிமன்றத்தின் வழக்குரைஞர், பல்கலைக்கழகம் ஒன்றில் சட்டம் தொடர்பான பட்டதாரியாக இருத்தல் |
| | பொருளியல்/சமூகவியல் | பொருளியல் அல்லது சமூகவியல் தொடர்பான விசேட பட்டதாரியாதல் வேண்டும். |
| | இரண்டாம் மொழிப் பரீட்சை - சிங்களம்<br>இரண்டாம் மொழிப் பரீட்சை - தமிழ் | (i) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் முதலாவது மொழியினை அல்லது இரண்டாவது மொழியினைச் சித்தியெய்திருத்தல் வேண்டும்<br>(ii) அரச கரும மொழிகள் திணைக்களத்தின் அடிப் படை அல்லது உயர் மொழிக் கற்கைநெறி ஒன்றினை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.<br>(iii) ஆரம்ப அல்லது உயர் மட்டத்தில் அரச கரும மொழிகள் திணைக்களத்தின் மொழி தொடர்பான கற்கை நெறி ஒன்றினை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.<br>(iv) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் விருப்பத்துக்குரிய சிங்களம் அல்லது தமிழ் பாடத்தினை சித்தியெய்தியிருத்தல் வேண்டும். |
| | இரண்டாம் மொழிப் பரீட்சை - ஆங்கிலம் | க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில பாடத்தில் சாதாரண சித்தி அல்லது அதற்கு மேல் சித்தியெய்தியிருத்தல் வேண்டும். |

*குறிப்பு.- 2012.01.02 ஆந் திகதியன்று அல்லது அதன் பின்னர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள அலுவலர்கள் அவர்களின் நியமனக் கடிதங்களின் ஏற்பாடுகளுக்கிணங்க வேறு அரச கரும மொழிகளில் தேர்ச்சியினை அடைந்து கொள்வதன் பொருட்டு இப்பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டாம் மொழித் தேர்ச்சிப் பரீட்சைக்காக தோற்றுவதற்கு கேட்டுக்கொள்ளப்பட மாட்டார்கள். ஆனால் 07/2007 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் வேறு அரச கரும மொழியில் தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.*

*15. பெறுபேறுகளை வெளியிடுதல்.- இப்பரீட்சைக்காக விண்ணப்பித்த அல்லது தோற்றிய சகல பரீட்சார்த்திகளினதும் பெறுபேறுகள் பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்படும். பரீட்சையின் பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்கு அனுமதிக்கப்படாது.*

*16. இப்பரீட்சை அறிவித்தலில் ஏற்பாடுகள் அளிக்கப்படாத ஏதேனும் விடயங்கள் தொடர்பில் பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு செயலாளரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.*

*பீ. பி. அபேகோன்,*
*செயலாளர்,*
*பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.*

*பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,*
*சுதந்திர சதுக்கம்,*
*கொழும்பு 7,*
*2014, நவெம்பர் 28.*

*12-596*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.